மங்கையர், ஆடவர்
மனதைக் கொள்ளை
கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு,
பருத்தி புடைவைக் கடல்
திருமாட்டி
புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

கல்யாண முகூர்த்தப்
புடைவைகளின்
கைராசியான முன்னணி
நிறுவனம்
திருமாட்டி
புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 05 செவ்வாய்க்கிழமை (20 — 12 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 24

# விடுதலைப் புலிகளுடனான பேச்சு குறித்து

# நேற்றிரவு வரை சந்திரிகா மந்திராலோசனை!

## மீன் தூண்டிலில் சிக்கிய வெடிகுண்டுப் பார்சல்!

### மீட்டவர் பலி; மூவர் படுகாயம்

கொழும்பு, டிச. 20

கொழும்புக்கு சமீபமாகவுள்ள ஜா-எலப் பகுதியில் தண்டு கங்க என்ற ஆற்றில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ஒருவரின் தூண்டிலில் பார்சல் ஒன்று சிக்கிக் கொண்டது!

தமக்கு ஏதோ ஓர் அதிர்ஷ்டம் கிடைத்து விட்டதாக எண்ணி, அந்தப் பார்சலை எடுத்துச் சென்று பக்குவமாகத் திறந்தார் அந்த நபர்.

ஆனால் அதிர்ஷ்டத்துக்குப் பதிலாக துரதிர்ஷ்ட சம்பவமே நிகழ்ந்தது.

அப்பார்சலில் இருந்த வெடிகுண்டு வெடித்து அந்த நபர் துடிதுடித்துப் பலியானார். அருகில் இருந்த மற்றும் மூவரும் படுகாயமடைந்தனர்.

கடந்த வாரம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் எஸ். சரத் பெர்னாண்டோ (31 வயது) என்பவரே பலியானவர் ஆவார்.

பார்சலில் அதி சக்தி வாய்ந்த குண்டு இருந்ததாக புலனாய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(ஒ-17)

## இந்திய இழுவைப்படகு ஏற்படுத்திய பரபரப்பு

தலைமன்னார், டிச. 20

இந்திய இழுவைப்படகுகளினால் பேசாலையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

கடந்த வாரம் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது;-

தலை மன்னார், பேசாலை கடற் பிராந்தியத்தில் இந்திய இழுவைப்படகுகள் இறால் பிடிக்க வருவது சமீப நாட்களாக அதிகரித்து வருகிறது.

சம்பவதினம் இப்படியான சில படகுகள் இழுவை வலைகளை இழுத்த வண்ணம் பேசாலைக் கரைநோக்கிச் சென்று கொண்டிருந்தன

பேசாலைக் கரையில் உள்ள பொலீஸ் காவல் நிலையத்துக்கு சுமார் 200யார் தூரம் வரை சிலபடகுகள் வந்துவிடவே பொலீஸார் அப்படகுகளை கடல் எல்லைக்கு அப்பால் துரத்துவதற்காக ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அவ்வேளையில் பேசாலை பொலீஸ் நிலையத்துக்கு அருகில் வைத்து பொதுமக்களுக்கு அடையாள அட்டை வழங்கும் நடவடிக்கையில் ராணுவத்தினர் ஈடுபட்டிருந்தனர்

வெடிச் சத்தம் கேட்டவுடன் துப்பாக்கிகளை ஏந்திய வண்ணம் தாக்குதலுக்கு ஆயத்தமாக ராணுவத்தினர் தரை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணப் பொருள்களில் இம்முறையும் மா இல்லை

யாழ்ப்பாணம், டிச. 20

இடம்பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருள்களில் இம்முறையும் மா இருக்கமாட்டாது என்று அறியவந்துள்ளது.

ஒக்ரோபர்மாதத்தின்முதல் இரண்டு வாரங்களுக்கும் உரிய 20 ,ஏ' மூத்திரைக்குரிய நிவாரணப் பொருள்களை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் விநியோகித்து முடிக்குமாறு புனர்வாழ்வுப் பகுதி கூட்டுறவுச் சங்கங்களைக் கேட்டுள்ளது.

இம்முறை அரிசி, சீனி, மைசூர் பருப்பு, தேயிலை, கடலை, தீப்பெட்டி ஆகியவற்றோடு 2 அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு வெள்ளைப்பூடும், 4 அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு லக்ஸ்பிறேயும், 5 அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு பெருஞ்சீரகமும் மேலதிகமாக வழங்கப்படவுள்ளன.

(அ-4)

### மா, சீனிக்கு நிலவும்

## தட்டுப்பாட்டை தவிர்க்க அரச அதிபர் முயற்சி

மா, சீனி ஆகிய இரண்டு அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கும் யாழ். மாவட்டத்தில் அடிக்கடி தட்டுப்பாடு உண்டாகுவதைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளை யாழ். அரச அதிபர் திரு. கே. பொன்னம்பலம் கொழும்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஆராய்வார்.

கொழும்பில் தங்கி நிற்கும் காலத்தில், தனியார் துறையினர் உணவு மற்றும் பாவனைப் பொருள்களைக் கொண்டு வருவருதற்குத் தனியான கப்பல் வசதியை ஏற்பாடு செய்வதற்குரிய பணிகளிலும் தாம் ஈடுபட இருப்பதாக அரச அதிபர் தெரிவித்தார்.

அரச அதிபர் திரு. பொன்னம்பலம் இன்று கொழும்பு பயணமாகிறார். கொழும்பு செல்லும் வழியில் அவர் கிளிநொச்சியில் ஒரு சில நாட்கள் தங்கியிருந்து கிளிநொச்சி மாவட்ட அலுவல்களையும் கவனிப்பார்.

(அ-4)

## தூதுக்குழுவில் வரும் உறுப்பினர்கள் யார் என்பது குறித்தும் ஆராய்வு

கொழும்பு, டிசம்பர் 20

ஸ்ரீலங்கா அரசுத் தரப்புப் பிரதிநிதிகள் யாழ். சென்று விடுதலைப் புலிகளுடன் பேசுவது குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்றிரவும் தமது அரசின் உயர்மட்டப் பிரமுகர்களுடன் மந்திராலோசனை நடத்தினார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தின் முடிவில் அரசு — விடுதலைப் புலிகள் இரண்டாம் கட்டப் பேச்சுக் குறித்து இறுதி அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டது.

புலிகளுடனான உத்தேச பேச்சுவார்த்தை குறித்து ஆராய்வதற்கான கூட்டம் ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா நேற்று முன்தினம் காலை கொழும்பு அலரிமாளிகையில் கூட்டியிருந்தார்.

இந்தக் கூட்டத்தின் முடிவில் பேச்சுக்கான திகதி மற்றும் அரசுத் தரப்பில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகள் பற்றி அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அக்கூட்டம் நடைபெற்று பின்னர், நேற்று மாலை வரை ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது

நேற்று மாலை ஆரம்பமாகி இரவு வரை நீடிக்கவிருந்த மேற்படி ஆலோசனைக் கூட்டத்தின் முடிவில் —

அரசுத் தரப்புப் பிரதிநிதிகளாக யாழ். வரும் பிரமுகர்கள் குறித்து அறிவிக்கப்படவிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## நாளை மறுதினமே இருதரப்புப் பேச்சு?

யாழ்ப்பாணம், டிச. 20

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்காக ஸ்ரீலங்கா அரசுத் தரப்பு தூதுக்குழு நாளை மறுதினமே யாழ் வரும் என தற்போது எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தூதுக்குழு இன்று அல்லது நாளை யாழ் வரக்கூடும் என முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அரசுத் தரப்பு தூதுக்குழுவின் யாழ் வருகை குறித்து கொழும்பில் நேற்று முன்தினம் தாம் நடத்திய உயர்மட்ட ஆலோசனைக் கூட்டத்தை ஜனாதிபதி சந்திரிகா நேற்று மாலைக்கு ஒத்திவைத்ததை அடுத்து—

அரசுத் தூதுக்குழுவின் வருகையும் தள்ளிவைக்கப்படும் என ஊகிக்கப்பட்டது.

இரண்டாம் கட்டமாக இடம்பெறும் ஒருநாள் பேச்சுக்கள் எதிர்வரும் 22 ஆம் திகதி (நாளை மறுதினம்) நடைபெறும் எனத் தாம் எதிர்பார்ப்பதாக அரசுத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரச தூதுக்குழுவில் பிரிகேடியர் கல்பகே

யாழ்ப்பாணம், டிச. 20

யாழ். வரும் அரசதரப்புக் குழுவில் இராணுவ அதிகாரியான பிரிகேடியர் கல்பகே இடம்பெறக்கூடும் என ஊகம் தெரிவிக்கப்படுகின்றது.

சில காலம் வன்னிப்பிராந்தியக் கட்டளையிடும் அதிகாரியாகப் பணியாற்றிய அவர், தற்போது இராணுவ செயற்பாட்டுப் பணிப்பாளராகப் பணிபுரிகின்றார்

அவரே அரசதரப்புக் குழுவில் — இராணுவத்தின் பிரதிநிதியாக இடம்பெறுவார் எனக் கருதப்படுகிறது.

(உ-4-6)

## தமிழறிஞர் கி. ஆ. பெ. மறைந்தார்



சென்னை, டிச. 20

முதுபெரும் தமிழறிஞரும் முத்தமிழ்க்காவலருமான திரு கி. ஆ. பெ. விசுவநாதம் நேற்றுக் காலை சென்னையில் காலமானார். அவருக்கு வயது 96.

25 நூல்களுக்கு மேல் எழுதியுள்ள திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் சித்த மருத்துவத்தின் வளர்ச்சிக்கும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

## பாலபட்டபெண்டி வருவது சந்தேகம்!

யாழ்ப்பாணம், டிச. 20

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு யாழ். வரவிருக்கும் ஸ்ரீலங்கா அரச தரப்புக் குழுவில் ஜனாதிபதியின் செயலாளர் கூகும் பாலபட்டபெண்டி இடம் பெறுவது சந்தேகம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

புலிகளுடன் முதற்கட்டப் பேச்சு நடத்துவதற்கு யாழ். வந்த அரச தரப்புக் குழுவுக்கு பாலபட்டபெண்டியே தலைமை வகித்திருந்தார் என்பது தெரிந்ததே.

கடந்த வாரம் கடும் சுகவீனமுற்ற அவர் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார்.

அவர் யாழ். வருவது குறித்தும் இன்னும் முடிவாகவில்லை. மருத்துவ ஆலோசனைக்கு இணங்க யாழ். வருவதை அவர் தவிர்க்கக்கூடும் என செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

(உ-எ)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், டிச. 20

கிளாலி – பூநகரி படகுச் சேவை இன்று செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

(இ-3)

## பாதுகாப்பு செலவு 1995 இல் 2,700 கோடி ரூபா

### அமைச்சர் பீரிஸ் தகவல்

கொழும்பு, டிச. 20

1995ஆம் ஆண்டில் பாதுகாப்புச் செலவு 2,700 கோடி ரூபாவாக இருக்கும். 1993 ஆம் ஆண்டில் பாதுகாப்புச் செலவு [illegible] கோடி ரூபாவாக இருந்தது. 1994 ஆம் ஆண்டில் இச்செலவு 2,500 கோடி ரூபாவாகக் காணப்பட்டது.

நீதி அரசியலமைப்புத் துறை அமைச்சரும், பிரதிநிதி அமைச்சருமான ஜி. எல். பீரிஸ் நாடாளுமன்றத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

(க)

### தமிழை ஆட்சி மொழியாக்க கோரி

## தமிழ் மாநாட்டின்போது உண்ணாவிரதம் நடக்கும்!

### சென்னை தமிழ் சங்கம் அறிவிப்பு

சென்னை, டிச. 20

தமிழ் நாட்டில் தமிழை ஆட்சி மொழியாகவும் பயிற்று மொழியாகவும் அறிவிக்கக் கோரி உலகத் தமிழ் மாநாடு நடைபெறும் சமயம் தமிழ் அறிஞர்கள் உண்ணா விரதம் அனுஷ்டிக்க இருக்கிறார்கள்.

சென்னைத் தமிழ்ச் சங்கம் இவ்வாறு அறிவித்துள்ளது.

தமிழ் நாட்டில் ஆட்சி பீடமேறுவோர் மொழிக் கொள்கையில் தெளிவான கொள்கையைக் கடைப்பிடிப்பதில்லை எனவும் ஆங்கிலப் பாடசாலைகளின் தொகை அதிகரித்துள்ளது எனவும் இச் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

தமிழ் படிக்காமல் பதவி உயர்வு வழங்கக் கூடாது எனவும் தமிழ் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும் எனவும் சங்கம் கோரியுள்ளது.

(க)

## மணலாறுத் தாக்குதலில் மூன்று சிப்பாய்கள் பலி!

கொழும்பு, டிச. 20

மணலாறுப் பகுதியில் ஸ்ரீலங்கா படையினர் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் மூன்று சிப்பாய்கள் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பில் செய்தி வெளியாகியது.

ஜனகபுர பகுதியில் உள்ள படையினரின் முன்னணி காவல் அரண்கள் மீதே இத் தாக்குதல் நடத்தப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

(உ-எ-3-6)

### வடக்கே லொறியில் எடுத்துச் சென்ற

## இருபது கார் பற்றரிகளை படையினர் கைப்பற்றினர்!

### லொறிச் சாரதி கைது

கொழும்பு, டிச. 20

அத்தியாவசியப் பொருள்களுடன் வடக்கே சென்ற லொறி ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 20 கார் பற்றரிகள் அனுராதபுரம் பகுதியில் வைத்து படையினரால் கைபபற்றப் பட்டுள்ளன என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

லொறிச் சாரதியான தமிழர் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக அனுராதபுரம் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். சம்பந்தப்பட்ட லொறியும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இதுபோன்று பலதடவைகள் அந்த லொறியில் கார் பற்றரிகள் மறைந்து வைக்கப்பட்டு வடக்கே எடுத்துச் செல்லப்பட்டது விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதாக ''தினமின'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

(ஐ-6)

## சட்டப்படி வேலை செய்ய தாதிகள் சங்கம் முடிவு

கொழும்பு, டிச. 20

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் பணிபுரியும் தாதிகள் நாளை புதன்கிழமை முதல் சட்டபபடி வேலை செய்யும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனா.

அரசாங்க சேவை ஐக்கிய தாதிகள் சங்கம் சுகாதார அமைச்சுக்கு சமர்ப்பித்த கோரிக்கைகளுக்கு சாதகமான பதில எதுவும் இதுவரை கிடைக்காதவைத அடுத்தே தாதிகள் இந் நடவடிக்கையில் இறங்கவுள்ளதாக சங்கத்தின் தலைவர் ''லங்காதீப''வுக்குத் தெரிவித்துள்ளார்.

(ஐ-6)

### முச்சந்தி முரலி



அப்ப... டாக்குத்தர் மாரிலை இருந்து வேலை நிறுத்த நோய் நேர்ஸ்மாருக்கும் தொத்தப் போகுது போலை...!

## துரைராசாவுக்கு கௌரவ பட்டம்

கொழும்பு, டிச. 20

யாழ் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் காலஞ்சென்ற பேராசிரியர் அ. துரைராசாவுக்கு, இன்று நடைபெறும் பேராதனை பல்கலைக் கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழாவில் மறைவுக்குப் பிந்திய கௌரவப் பட்டம் வழங்கப்படவுள்ளது.

இன்று பற்பகல் நடைபெறவுள்ள பட்டமளிப்பு விழாவில் மொத்தம் 1,600 பேருக்கு பட்டமளிக்கப்படவுள்ளது.

இலங்கையின் பல்கலைக்கழக வரலாற்றில் இத்தகைய அதிக எண்ணிக்கையானோர் ஒரே முறையில் பட்டம் பெறுவது இதுவே முதல் தடவை என்று தெரிவிக்கப்படுகிறது.

மற்றும் மூன்று பிரபல கல்விமான்களுக்கும் பேராதனைப் பல்கலைக் கழகம் கௌரவப் பட்டங்களை வழங்கியுள்ளது.

(அ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A/L 95

(A/L பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான)

சனி – ஞாயிறு

[மீட்டல் வகுப்புக்கள்]

ஆரம்பம்: 24-12-1994 (சனிக்கிழமை)

| | | |
|---|---|---|
| புவியியல் | — சண்முகராஜா | 10-11 |
| அளவையியல் | — சோதிலிங்கம் | 11-12 |
| நாடகமும் அரங்கியலும் | — மோசேஸ் | 12- 1 |
| பொருளியல் | — மகேந்திரன் | 1- 2 |
| இந்துசமயம் | — கிரிதரன் | 2- 3 |
| கிறீஸ்தவநாகரிகம் | — திரு. கொலின்ஸ் | 3- 4 |
| இந்து நாகரீகம் | — திருமதி அருள்நங்கை | 3- 4 |
| தமிழ் | — குழந்தை | 4- 5 |
| அரசியல் | — கியூபேட் | 5- 6 |

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (சி/20)



தமிழீழ பொதுக்கல்வித் தேர்வில்
தேசிய மட்டத்தில் 5 ஆம்
இடத்தைப் பெற்று
தமிழீழத் தேசியத் தலைவரின்
சிறப்புப் பரிசினைப் பெறும்
எமது நிறுவன மாணவன்
க. சிறீவிசாகனை
லக்கி கல்வி நிலைய ஆசிரியர்கள்
மாணவர்கள் சார்பில் வாழ்த்துகின்றோம்

லக்கி கல்வி நிலையம்

கட்டுடை, தொட்டிலடி.

★ எமது நிறுவனத்தில் ஆண்டு 3 முதல் 11 வரை அனுபவமும் திறமையும் வாய்ந்த ஆசிரியர்களாலும், பல்கலைக்கழக மாணவர்களினாலும் கற்பிக்கப்படுகின்றது.

கணிதம்: M. லோகன், K. ஆனந்தன், S. ரவி, S. சிவசிறி
விஞ்ஞானம்: G. ஈசன், K. ஜெகன், S. வரதன், G. ரதி
ஆங்கிலம்: நாதன், பகிரதன், சிவநேசன்
தமிழ்: N. கணேஷ், தயா, T. மதிவதனி
வரலாறும் சமூகக்கல்வியும்: S. சந்திரராஜா, M. மகேந்திரன், செல்வி. மனோன்மணி
வர்த்தகமும் கணக்கியலும்: விஜயேந்திரன்

★ கணிதம், விஞ்ஞான பாடங்கள் வாரத்தில் 4 வகுப்புக்கள் நடைபெறுகின்றன

(34269) நிர்வாகி



BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L 95

DAY CLASS

(94 பரீட்சை எடுத்த மாணவர்களுக்கானது)

பிரிவு III

ஆரம்பம்: 2 - 1 - 1995

காலை 8-00 மணி

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

★ பிரிவு I, II இற்கான அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

(சி-12)



யாழ்ப்பாணப் ப. நோ. கூ. சங்கம் வரையறுக்கப்பட்டது

பதவி வெற்றிடங்கள்

1. பதவிகள்
   - அ. அச்சக முகாமையாளர்
   - ஆ. ஒப்பு நோக்குநர்
   - இ. அச்சுக் கோப்பாளர்
   - ஈ. வெதுப்பக முகாமையாளர்
   - உ. உணவக முகாமையாளர்
   - ஊ. மிதிவண்டியில் விநியோகஸ்தர்
   - எ. தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள்
2. விண்ணப்ப முடிவு திகதி: 26 — 12 — 1994
3. தகைமைகள்
   முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. மேலதிக விவரங்களுக்குச் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்;
4. விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
   பொது முகாமையாளர், யாழ். ப. நோ. கூ. சங்கம், 291, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

- பொது முகாமையாளர்.

[சி-10068]


# தேர்தலில் 5 ஆண்டுகள் கலந்து கொள்வதில்லை

## வி. பி. சிங் அறிவிப்பு

புதுடில்லி, டிச. 20

"இளைஞர்களை ஒருங்கிணைத்து அவர்களது முன்னேற்றத்துக்குப் பாடுபடுவதற்காக எம். பி. பதவியை ராஜினாமாச் செய்துள்ளேன். இன்னும் 5 ஆண்டுகளுக்கு நான் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை."

இந்தியாவின் முன்னாள் பிரதமர் வி. பி.சிங் அண்மையில் சென்னை சென்றிருந்தபோது இவ்வாறு கூறினார்.

1996 ஆம் ஆண்டுநாடாளுமன்றத் தேர்தலில் நான் போட்டியிட மாட்டேன். அதற்குப் பிறகும் நான் போட்டியிடமாட்டேன் என்று கூறவில்லை. அரசியலை விட்டு விலக மாட்டேன் என்றும் அவர் கூறினார். (க)

# புலிகளின் குரல் வானொலியில்

**20 — 12 — 1994**

**செவ்வாய் இரவு**

- ★ 8-01 — ஊர்சுற்றும் ஒலிவாங்கி
- ★ 8-10 — அறிந்து கொள்ளுங்கள் - தகவற் களஞ்சியம்
- ★ 8-20 — நலந்தானா? - "தாய்ப்பால் ஊட்டுவது தாயின் தலையாய கடமை" வழங்குபவர் வைத்திய கலாநிதி சுப்பிரமணியம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — கருத்துக்களம் இ. இராஜேஸ்வரன் எழுதிய "மறதி"
- ★ 8-50 — களமும் கானமும் — அச்சுநகர் பானுஷாந்தன் எழுதிய "உம் பெயர் என்றும் மண்ணிலும் மனதிலும்"
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்,

**21 — 12 — 1994**

**புதன் காலை**

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- ★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## தாம் சரணடைவதற்கு

# ஆயிரம் கோடி ரூபா கேட்கிறார் வீரப்பன்!

சென்னை, டிச. 20

இந்தியாவின் கர்நாடக, தமிழ்நாடு மாநிலங்களில் பல்லாண்டுகளாகத் தேடப்பட்டுவரும் சந்தனக் கடத்தல்காரன் வீரப்பன் பொலிஸாரிடம் சரணடைவதற்கு முன் நிபந்தனையாக ஜனாதிபதி தம்மை மன்னிக்க வேண்டும் என்றும் 3 கோடியே 30 லட்சம் டொலர் தரப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

வீரப்பனின் கோரிக்கைகள் குறித்து ஆராய்ந்து வருவதாகத் தமிழ்நாடு அரசு கடந்த 14 ஆம் திகதி தெரிவித்தது.

தான் சரணடைந்த பின் தனக்கு மன்னிப்பும் பந்தோபஸ்தும் தமது வாழ்க்கைக் கதையைத் திரைப்படமாகத் தயாரிக்கும் உரிமையும் தரப்பட வேண்டும் என்று வீரப்பன் கோரியுள்ளார்.

தமிழ்நாடு அரசிடமிருந்து ஆயிரம் கோடி ரூபாவையும் வீரப்பன் கோரியுள்ளார் என்று மாநில அரசின் அறிக்கை ஒன்று தெரிவித்தது. (க)

## வவுனியாவில்

# சுவீகரித்த காணிகளை திருப்பி வழங்க முடியாது

## அமைச்சர் தர்மசிறி கூறுகிறார்

வவுனியா, டிச. 20

வவுனியா நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் வவுனியா விமான நிலைய ஓடுபாதையையும் இதற்கான பாதுகாப்பு வலயத்தையும் விஸ்தரிப்பதற்காக சுவீகரிக்கப்பட்ட சில காணிகளைப் பாதுகாப்புக் காரணங்களுக்காகதிருப்பி வழங்க முடியாது என்று வெகுஜனத் தொடர்பு சாதன விமானப் போக்குவரத்து அமைச்சர் திரு. தர்மசிறி சேனநாயக்கா கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி ஆர். புலேந்திரன். இறம்பைக்குளம் மகளிர் பாடசாலை விளையாட்டு மைதானம், மயானபூமி ஆகியன அமைந்துள்ள பிரதேசத்தை விடுவிக்குமாறு கேள்வி எழுப்பிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

## சமுர்த்தித் திட்டத்தை வடக்கிலும் அமுல்படுத்துக

### நாடாளுமன்றில் எம். பி. கோரிக்கை

கொழும்பு, டிச. 20

"சமுர்த்தித் திட்டத்தை வடக்கேயும் அமுல்படுத்துங்கள்."

யாழ். மாவட்ட எம். பி. ஒருவர் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற சமுர்த்தித் திட்டம் பற்றிய விவாதத்தின் போது இவ்வாறு கூறினார்.

சமுர்த்தி என்றால் தமிழில் சுபிட்சமாகும். யாழ். மாவட்ட மக்கள் யுத்தத்தால் வறுமை நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். விவசாயம், மீன்பிடித்துறை, பனம் பொருள்களிலிருந்து கிடைக்கும் பயன்களிலேயே அவர்கள் தங்கியிருப்பவர்கள். இன்று அவர்கள் தங்கள் தொழிலை மேற்கொள்ள முடியாதுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

சமுர்த்தி பற்றிய புத்தகத்தில் சிங்கள மொழியில் உள்ளவை தமிழ் மொழியில் இடம் பெறாதிருப்பதை இரத்நாயக்கா எம். பி. குறிப்பிட்டார். சமுர்த்தியை வடக்குக் கிழக்கில் அமுலாக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா என்றும் அவர் வினவினார். (க)

## பயிலுநர் தாதியர்கள்:

# நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் தாமதமாகின

யாழ்ப்பாணம், டிச. 20

தாதியர் பயிற்சிக் கல்லூரிக்குத் தெரிவு செய்யப்பட்ட யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்குரிய கடிதங்கள் காலங்கடந்து கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சென்ற மாதம் 26ஆம் திகதி தெரிவு செய்யப்பட்ட பயிலுநர் தாதியர்களுக்கு கொழும்பு சுகாதார அமைச்சில் நேர்முகப் பரீட்சை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆயினும் நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் தபாலில் சேர்க்கப்பட்டு மறுநாள் வெள்ளிக்கிழமையே பயிலுநர் தாதியர்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

இதனை அடுத்து மேற்படி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட பயிலுநர் தாதியர் பலர் யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தில் இவ்விடயம் குறித்து முறையிட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் இவ்வாறாக சுமார் 30பேருக்கான நேர்முகப் பரீட்சைக்குரிய கடிதங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும்—

தற்போதைய சூழ்நிலையில் நேர்முகப் பரீட்சைக்கு காலதாமதமாக கொழும்பில் சமுகமளித்தாலும் அவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் எனவும் யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-4)

# பஸ் நிலையத்தில் உருவப்படங்கள் திரைநீக்கம்

யாழ்ப்பாணம், டிச. 20

லெப். கேணல் நளாயினி, மேஜர் மங்கை, கப்டன் அங்கயற்கண்ணி ஆகிய மகளிர் கடற் கரும்புலிகளின் நினைவுருவப் படங்கள் இன்று பிற்பகல் 5 மணிக்கு யாழ். புதிய பஸ்நிலையப் பகுதியில் திரைநீக்கம் செய்யப்படவுள்ளன.

நினைவுப் பேருரைகளும் அங்கு இடம்பெறும். (ஐ-3)

# வாய்ச் சுகாதார ஆய்வு

சண்டிலிப்பாய், டிச. 20

உலக சுகாதார ஸ்தாபனம் இவ்வருடத்தை வாய் சுகாதார வருடமாக (Oral Health Year) பிரகடனப்படுத்தியிருப்பதை அடுத்து யாழ். மாவட்டத்தில் வாய் சுகாதார ஆய்வை மேற்கொள்ளுவதற்கு வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் அண்மையில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை கார்த்திகேயர் வித்தியாலயம் ஆகியவற்றில் பற்சுகாதார ஆய்வு அங்கு கற்கும் மாணவ மாணவியர் மத்தியில் பல் வைத்தியர்களினால் மேற்கொள்ளப்பட்டது.

வயது வந்த பொது மக்கள் மத்தியில் வாய் சுகாதார ஆய்வு மேற்கொள்ளுவதற்காக தெரிவு செய்யப்பட்ட தொல்புரம் மத்தி கிராம அலுவலர் பிரிவில் கடந்த இருவாரங்களாக வீடு வீடாக பல் வைத்தியர்கள் வாய்ச் சுகாதார ஆய்வை நடத்தினர். (ஒ-135)

## அலுவலகம் இடம்மாற்றம்

யாழ். சுகாதார சேவை பிரதி மாகாண பணிப்பாளர் அலுவலகத்தில் இயங்கி வந்த யாழ். பிராந்திய மலேரியா தடுப்பு இயக்க வைத்திய அதிகாரியின் அலுவலகம் யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மாவட்ட மருந்துக் களஞ்சிய கட்டட மேல் மாடிக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## இன்று

மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பளை மாவட்ட வைத்திய சாலையின் தொழில் வழி சிகிச்சை நிலையத்தில் உளநலன் விடுதிப் பிரிவினரின் உற்பத்திப் பொருள்களான தைத்த ஆடை விற்பனை இன்று நடைபெறுகிறது. (இ)

## லொத்தர் மூலம் அதிர்ஷ்டம்:

# இந்திய முஸ்லிமுக்கு 140 கோடி ரூபா பரிசு

லண்டன், டிச. 20

பிரிட்டனின் மிகப் பெரும் லொத்தர் பரிசை ஒரு இந்திய முஸ்லிம் குடியேற்ற வாசி பெற்றுள்ளார். 280 லட்சம் டொலரை (சுமார் 140 கோடி ரூபா) பரிசாகப் பெற்றுள்ளார் இவர்.

இவருடைய பெயர் வெளியிடப்படவில்லை.

வட இங்கிலாந்து நகரான பிளேக் பேர்னில் ரசாயனத் தொழிற்சாலை ஒன்றில் வாரம் 300 டொலர் ஊதியத்துக்கு வேலை பார்க்கும் இவருக்கு 41 வயது எனவும் 3 புதல்வர்கள் உள்ளனர் எனவும் அறிய வருகின்றது.

## தொழில் நுட்ப ஆக்கத் திறன் போட்டி

யாழ்ப்பாணம், நல்லூர், வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய கல்விக் கோட்டங்களில் இருந்து தொழில் நுட்ப ஆக்கத்திறன் போட்டியில் பங்குபற்றியோருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம்—

எதிர்வரும் வியாழக்கிழமை 22 ஆம் திகதி காலை 9 மணிக்கு கனகரத்தினம் ம. ம. வியில் நடைபெறும்.

அத்துடன் கலைநிகழ்ச்சிகளும் வீடியோ படக்காட்சியும் இடம் பெறும். (ஓ)

## சொத்தி உபாலி பிணையில் விடுதலை

கொழும்பு, டிச. 20

மாத்தளை மாநகரசபையின் ஐ. தே. க. உறுப்பினர் ரஸ்மார் ஹுசேனின் படுகொலை தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பிரபல பாதாள உலக தலைவன் சொத்தி உபாலி, மாத்தளை மாவட்ட நீதிவானால் நிபந்தனையுடன் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அவருடன் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஏனைய 8 சந்தேக நபர்களும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

வழக்கு விசாரணை அடுத்த ஆண்டு பெப்ரவரி 22ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (எ)

## உப தபாலகம்

கிளிநொச்சி, டிச. 20

பூநகரியில் உள்ள செம்மங்குண்டுவில் புதிய உப தபாலகம் ஒன்று கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தபாலகத்திற்கான உபகரணங்கள் ஏற்கனவே கொழும்பில் இருந்து பூநகரிக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

# வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்கி உலகில் 100 கோடி மக்கள் தவிப்பு

**ஐ.நா, வின் 50ஆவது வருடாந்தக் கொண்டாட்டம் நடைபெறுவதை யொட்டி, ஐ.நா. சிறுவர் நிதியமான 'யுனிசெப்' 1995இல் உலகச் சிறுவர்களின் நிலை பற்றியும், 'யுனிசெப்' பின் சாதனைகள் பற்றியும் வெளியிட்டுள்ள அறிக்கை:**

"உலகில் நூறுகோடி மக்கள், வாழ்க்கையின் அடிப்படை வசதிகளின்றி, கல்வி, வேலைவாய்ப்பு, சுத்த நீர், அடிப்படை சுகாதாரப் பராமரிப்பு ஆகிய எதுவுமின்றி தமது சொந்தச் சூழலையும் எதிர்காலத்தையும் உயிர் வாழ்வதற்காகச் சின்னா பின்னப்படுத்த நிர்ப்பந்திக்கப்பட்ட நிலையில் வறுமையின் கோரப் பிடிக்குள் வாடி வதங்குகின்றனர்."

கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளை விடக் கடந்த ஐம்பது வருடங்களில் மனித நலனில் அதிகரித்த முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

சராசரி ஆயுட்காலம் 40 வருடங்களிலிருந்து 1950க்குப் பின்னர் 60வயதுக்கு மேலாக அதிகரித்துள்ளது.

வருமானம், போஷாக்கு, சுகாதாரப் பராமரிப்பு, கல்வி ஆகியவற்றில் பரந்த அளவிலான முன்னேற்றத்தையும் இது பிரதிபலிக்கிறது.

இதைப் போன்றே, ஐந்து வயதை எட்டுவதற்கு முன்னர் இறக்கும் குழந்தைகளின் விகிதாசாரமும் ஓர் எடுத்துக் காட்டான அறிகுறியாகும்.

கடந்த 50 வருடங்களில் அபிவிருத்தியடைந்து வரும் உலகம் இந்த எண்ணிக்கையை மூன்றில் இரண்டால் குறைத்துள்ளது.

1,000 பிறப்புக்களில் 300 மரணங்கள் என்ற நிலை 100 ஆகக் குறைந்துள்ளது. இதேவேளை, முதியோர் கல்வியும் 70 சதவீதத்திற்கு உயர்ந்து இரட்டிப்பாகியுள்ளது.

1950 களின் ஆரம்பத்தில் வருடாந்தம் 50 லட்சம் பேரைப் பலியெடுத்த சின்னம்மை வியாதி மீதான வெற்றி, ஏனைய முக்கியத்துவம் மிக்க முன்னேற்றங்களில் உள்ளடங்குகின்றது.

மிக அண்மைக் காலத்தில் தடுப்பூசி ஏற்றும் மட்டம் அதிகரித்து வந்ததால் இளம்பிள்ளைவாதத்தை மேற்கத்திய அரை வட்டத்திலிருந்தும் அபிவிருத்தியடைந்து வரும் உலகின் பல பகுதிகளிலிருந்தும் இல்லாமல் செய்துள்ளது. இரண்டாயிரம் ஆண்டளவில் இந்த வைரஸை இந்த உலகிலிருந்தே முற்று முழுதாக ஒழித்துவிட முடியும்.

### ஆர்னோல்ட் ரொயின்பியின் தீர்க்கதரிசனம்

இருபதாம் நூற்றாண்டு அரசியல் மோதல்கள் நிறைந்த சகாப்தமாகவோ அல்லது தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்கள் நிறைந்த சகாப்தமாகவோ இல்லாமல், முழு மனித குலத்தின் நலனை, சிந்திக்கத் துணிந்த சகாப்தமாக நினைவு கூரப்படும்" என்று பிரிட்டிஷ் வரலாற்று ஆசிரியரான ஆரனோல்ட் ரொயின்பி 1940 களில் முன்கூட்டியே தெரிவித்திருந்தார்.

1990களில் வந்த தலைப்புக்களை வைத்துப் பார்க்கையில் இந்தத் தீர்க்கதரிசனம் நம்பிக்கையற்ற இலக்காகத் தோற்றலாம் ஆனால் ஐந்து தசாப்த கால புள்ளிவிவரங்களை வைத்துப் பார்க்கையில் "அது ஒன்றும் எட்டப்பட முடியாத பரிமாணத்துக்கு அப்பால் இருப்பதாகத் தெரியவில்லை"

இந்தச் சாதனைகளுக்கு மத்தியிலும் உலக மக்களில் 100 கோடி மக்கள் இன்னமும் வறுமைப் பிடியில் வாழ்கின்றனர்.

### யுனிசெவ்வின் முக்கிய அக்கறை

அபிவிருத்தியடைந்து வரும் உலகிலுள்ள வறிய சிறுவர்களின் தேவைகளை ஈடுசெய்வதே யுனிசெப்பின் முக்கிய அக்கறையாகும்.

போஷாக்கின்மையை அரைவாசியாகக் குறைத்தல் —

முக்கிய சிறுவர் நோய்களைக் கட்டுப்படுத்துதல் —

இளம்பிள்ளைவாதத்தை ஒழித்துக் கட்டுதல் —

ஆரம்ப சுகாதாரக் கல்வியை வழங்குதல் —

சகல சமூகத்துக்கும் சுத்தமான நீர் — பாதுகாப்பான சுகாதாரத்தை வழங்குதல் உள்ளிட்ட பல விடயங்களை நான்கு வருடங்களுக்கு முன்னர் சிறுவர்களுக்கான ஐ.நாவின் உச்சி மாநாடு விசேட இலக்குகளாக முன் வைத்திருந்தது.

நூற்றுக்கு மேற்பட்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் இந்த இலக்குகளை ஈட்டுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் கண்டு வருகின்றன.

சிறுவர்களின் அடிப்படை இலக்குகளை ஈட்டுவதற்குப் பணம் மட்டும் போதுமானதல்ல. அரசியல் கடப்பாடும் திறமையான நிர்வாகமும் அதேயளவு முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அடிப்படைச் சமூக சேவைகளை வழங்குவதற்கு மேலதிகமாக வருடாந்தம் 3,000 கோடி டாலர்களிலிருந்து 4,000 கோடி டாலர்கள் வரை தேவைப்படுகிறது. இவற்றில் மூன்றிலிரண்டு பங்குக்கு அதிகமானவற்றை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளே வழங்குகின்றன.

"கோல்ப் விளையாடுவதற்கு இதைவிட அதிகமாக உலகம் செலவழிக்கிறது" என்று மனித சமூகம் வெட்கித் தலைகுனியும் நிலையில் இருந்து வருகிறது. (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பத்தாண்டு கால யுத்தம் காரணமாக வடபகுதியில் கல்வித்தரம் வீழ்ச்சி

## கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, டிச. 20
பத்தாண்டு கால யுத்தம் காரணமாக யாழ். மற்றும் வன்னி மாவட்டங்களின் கல்வித்தரம் குன்றியிருப்பதாக கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பதிரான தெரிவித்திருக்கிறார்.

இலங்கையில் 160 தேசிய பாடசாலைகள் இன்று உள்ளன. ஆனால் கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் ஒரு தேசிய பாடசாலை கூட இல்லை என்றும் —

இந்த நிலை மாற்றப்படும் என்றும் அவர் கடந்த வாரம் வவுனியாவுக்கு விஜயம் செய்திருந்த போது தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் கல்வி உபகரணங்கள் இன்மையால் அங்கு கல்வித்துறை வீழ்ச்சி அடைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் வவுனியா மாவட்டத்துக்கு நூறு ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இல்லாத பகுதிகளில் உள்ள தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கான சிபார்சு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (எ)

## கிளிநொச்சி ஒய்வூதியருக்கு நிலுவை கிடைக்கிறது

தென்மராட்சி, டிச 20
கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஓய்வூதியர்களுக்கு இம் மாத ஓய்வூதியத்துடன் 1993 ஜனவரி முதல் மே மாதம் வரையிலான வாழ்க்கைச் செலவுப்படி நிலுவை 1,300 ரூபாவும் வழங்கப்பட்டு வருகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கீழ் அடங்கும் பளைப் பகுதியில் கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு நிலுவையுடன் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

இதேவேளை உள்ளூராட்சித் திணைக்கள ஓய்வூதியர்களுக்கு இந்த வாழ்க்கைச் செலவுப்படி நிலுவை 1,300 ரூபாவும் நவம்பர் மாத ஓய்வூதியத்துடன் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மணலாறுபகுதியிலிருந்துவெளியேறிய குடும்பங்கள் தங்க நலன்புரி நிலையம்

## அத்தியாவசிய சேவைகள் இணைப்புக்குழு இணக்கம்

வவுனியா, டிச. 19
மணலாறு பகுதியில் இராணுவ முகாம்களை அடுத்துள்ள எட்டுக் கிராமங்களில் இருந்து இடம்பெயர்ந்து அகதிகளாகவுள்ள 500 குடும்பங்களுக்கு தற்காலிக நலன்புரி நிலையம் அமைப்பதற்கு அத்தியாவசிய சேவைகள் இணைப்புக் குழு இணக்கம் தெரிவித்துள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் திரு. எஸ். தில்லைநடராசா தெரிவித்தார்.

கடந்த 1990 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஆரம்பமாகிய அசம்பாவித நிலைமைகள் காரணமாக வெளியேறிய இக் குடும்பங்கள் கடந்த நான்கு ஆண்டுகளாகத் தமது உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலேயே அகதிகளாகத் தங்கியுள்ளன.

இதேவேளையில், வடபகுதியிலிருந்து வவுனியா மற்றும் நாட்டின் தென்பகுதி நோக்கி வருகின்ற வடபகுதி பயணிகளின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தாண்டிக்குளத்தில் பொது மலசல கூடங்கள் மற்றும் பெண்களுக்குத் தேவையான உடைகள் மாற்றுவதற்குரிய அறை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் நாயகம் இணக்கம் தெரிவித்துள்ளார். (க)

## கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பு:

# கூட்டத்தில் படம் எடுத்தவர்களின் உதவி கோருகின்றனர் பொலீஸார்

கொழும்பு, டிச. 20
கொழும்பு கிராண்ட்பாஸ் கூட்டத்தில் காமினி திசாநாயக்கா உரையாற்றிய சமயம் அங்கு இருந்த சனக் கூட்டத்தை புகைப்படம் எடுத்தவர்களும், வீடியோ நாடா பதிவு செய்தவர்களும் அவற்றை விசாரணைக்காக ஒப்படைக்குமாறு பொலீஸ் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பொலீஸ் சி.ஐ.டி.பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளுடன் இது தொடர்பாக சம்மந்தப்பட்டவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்களையும் பொலீஸ் தலைமையகம் வெளியிட்டுள்ளது.

இதேவேளை—
கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பில் உயிரிழந்த அல்லது காயமடைந்தவர்களினது உடைமைகள் கண்டெடுக்கப்பட்டு பொலீஸ் சி.ஐ.டி. பிரிவில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பொருள்களை உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தப் பொருள்களுக்கு உரிமைகோருபவர்கள் இன்று முதல் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை சி.ஐ.டி. அலுவலகத்திற்குச் சென்று ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-ஐ)

## கடந்த 17 ஆண்டுகள் செய்துகொள்ளப்பட்ட

# சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைகள் வெளியிடப்படா!

## வாசுவின் கோரிக்கை அரசினால் நிராகரிப்பு

கொழும்பு, டிச. 20
இலங்கை அரசு சர்வதேச நாணய நிதியத்துடன் 1977 ஒகஸ்ட் முதல் 1994 ஒகஸ்ட் வரைக்கும் இடைப்பட்ட 17 வருட காலத்தில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் கடைப்பிடிக்கப்பட்ட நிபந்தனைகள் ஆகியவற்றை நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசியல் அங்கம் வகிக்கும் பிரதான அரசியல் கட்சிகளில் ஒன்றான லங்கா சமசமாஜக் கட்சியின் கோரிக்கையை அரசு நிராகரித்து விட்டது.

இக் கோரிக்கையை ல.ச.க. எம்.பிக்களான வாசுதேவ நாணயக்காரவும் பற்றி வீரக்கோனும் நாடாளுமன்றத்தில் விடுத்தனர்.

டாக்டர் என்.எம். பெரேரா நிதி அமைச்சராக இருந்தபோது சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைளையும் நிபந்தனைகளையும் பகிரங்கமாக அறிவித்தார் என்று திரு வீரக்கோன் தெரிவித்தார்.

இதற்கு பதிலளிக்கையில் பிரதி அமைச்சரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், தேசிய நலன் கருதி அவ்வுடன்படிக்கைகள் மற்றும் நிபந்தனைகளை பகிரங்கமாக அறிவிக்க முடியாது என்று கூறினார். [இ-எ]

# அரங்கக் கலை நூல்கள் தமிழில் அதிகமாக வெளிவர வேண்டும்

## "ஆற்றுகை" வெளியீட்டு விழாவில் உரை

குருநகர், டிச. 20
அரங்கக் கலை பற்றிய நூல்கள் தமிழில் மிகவும் குறைவாகவே உள்ளன. அவை கூடுதலாக வெளியிடப்படவேண்டும். இந்தக் குறைபாட்டை ஓரளவுக்கு ஈடுசெய்யும் விதத்தில் 'ஆற்றுகை' சஞ்சிகை வெளியிடப்படுகிறது.

யாழ். திருமறைக்கலாமன்ற பொதுச் செயலர் திரு. வி. ஜே. கொன்ஸன்ரைன் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 7ஆம் திகதி யாழ். மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் நடைபெற்ற 'ஆற்றுகை' எனும் அரங்கியலுக்கான காலாண்டு சஞ்சிகையை வெளியிட்டு வைத்துப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

வைபவத்துக்கு கலைப் பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை தலைமை வகித்தார். திரு. ஜி. ஜெனத் அறிமுகவுரை நிகழ்த்தினார்.

திரு. கொன்ஸன்ரைன் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:

''அரங்கக்கலை இன்று உலகளாவிய ரீதியில் ஒப்பற்ற அளவுக்கு வளர்ந்திருக்கிறது. பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அது ஒரு கற்கை நெறியாகச் சேர்த்துக் கற்பிக்கப்படுகிறது.

முப்பரிணாமம் கொண்ட நடிகன், இரு பரிணாமம் கொண்ட திரைச்சீலை, ஒப்பனை, காட்சியமைப்பு, ஒலி, ஒளி ஆகியவற்றில் புதிய சிந்தனைகளை வளர்த்தெடுப்பதற்கும்—

மேலைத்தேய அரங்கியல் போக்குகளையும், வளர்ச்சியையும் நம்மவர் அறிந்து கொள்வதற்கும் 'ஆற்றுகை' துணை புரியும் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

ஆசியுரையை அருட் திரு லம்பேட் அடிகளும் மதிப்பீட்டுரைகளை திரு.பி.சி. ஆனந்தராசா, திரு. எஸ். ஜெயசங்கர் ஆகியோரும் நிகழ்த்தினர்.

நாடகப் பயிலக மாணவர்கள் மேடையேற்றிய [illegible] புகள்'' நாடகமும் விழாவில் இடம் பெற்றது. (க-51)

## ல. ச. ச. க. 59ஆவது ஆண்டு விழா

கொழும்பு, டிச. 20
லங்கா சமசமாஜக் கட்சியின் 59ஆவது ஆண்டு நிறைவு விழா கொழும்பு பொது நூல் நிலையத்தில் இம்மாதம் 21ஆம் திகதி பிற்பகல் 4மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## 1995 இல் 190 தினங்கள் பாடசாலை

கொழும்பு, டிச. 20
1995ஆம் ஆண்டில் குறைந்த பட்சம் 190 நாள்களுக்கு பாடசாலைகளை நடத்தும்படி சகல பாடசாலைகளுக்கும் கல்வி அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

சனி, ஞாயிறு மற்றும் வேலை நாட்களில் வரும் 23 பொது விடுமுறைத் தினங்களையும் தவணை விடுமுறைகளையும் தவிர்ந்த ஏனைய நாட்களில் பாடசாலைகள் நடத்தப்படவேண்டும் என்று கல்வி அமைச்சின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## வீதிகளில் திடீர்ச் சோதனை

வடமராட்சி, டிச. 20
வடமராட்சி கிழக்குப் பகுதியிலிருந்து சட்ட விரோதமாக விறகுகளையும், விறகுக்காக பச்சை மரங்களை வெட்டிக் கொண்டு வருவோர் மீது காவல் துறையினர் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

காவல் துறையினர் வீதிகளில் திடீர் சோதனை நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர். (ஓ-173)

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், டிச. 20
கடந்த 10 ஆம் திகதி வங்காலையில் படையினரின் காவலரண்கள் தாக்கப்பட்ட சம்பவத்தில் விழுப்புண் அடைந்திருந்த கப்டன் சத்தியசீலன் (ஜேசுதாஸா அன்ரனி பிராடோ — மன்னார்) என்ற போராளி வீரச்சாவடைந்தார். (ஐ)

## சாயி சமித்தி தலைவர் இலங்கை விஜயம்

கொழும்பு. டிச. 20
சாயி சமித்திகளின் சர்வதேசத் தலைவர் ஸ்ரீ இந்திராஜா எதிர்வரும் ஜனவரி 16 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். அவர் கொழும்பு ஸ்ரீ சத்திய சேவா சமித்தி மந்திரின் 3 ஆவது வருடாந்த விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். (சு)

## சுவிஸ் தூதராக நியமனம்

கொழும்பு, டிச. 20
சுவிற்சர்லந்து நாட்டின் இலங்கைக்கான புதிய தூதராக திருமதி மரியா லூஸியா கரோனி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அவர் கடந்த வாரம் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து தனது நியமனப்பத்திரத்தைச் சமர்ப்பித்தார். (எ)

## தொடர்புறு வகுப்பு

யாழ்ப்பாணம், டிச. 20
நல்லூர் தொலைக் கல்வி நிலையத்தில் தொடர்புறு வகுப்பு இம்மாதம் 23ஆம் திகதி தொடக்கம் ஐந்து நாட்கள் நடைபெறும். நிலையத்தைச் சேர்ந்த 1991—1994, 1993 — 1995 ஆசிரிய மாணவர்கள், போதனாசிரியர் அனைவரையும் சமுகமளிக்கும்படியும் அன்றைய தினம் [illegible] வழங்கப்படும் என்றும் [illegible] அறிவிக்கின்றார். (சு)

## கொழும்பு சிவன் கோயிலில்

# கடற்படைத் தளபதி மீது மோதியதமிழ்பெண்கைது!

கொழும்பு, டிச. 20
கொழும்பு சிவன் கோயிலில் வைத்து கடற்படைத் தளபதி மொஹான் சமரசேகர மீது மோதியதாகக் கூறப்படும் தமிழ் யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டு, கொட்டாஞ்சேனை பொலீஸில் ஒப்படைக்கப்பட்டார்.

கடற்படைத் தளபதி கோயிலினுள் உட்பிரவேசித்தவேளை திடீரென இந்த யுவதி அவர் மீது மோதியதாக பொலீஸார் தெரிவித்தனர்.

பிரஸ்தாப யுவதி கைதானவுடன், அவரிடம் வெடி மருந்துகள் ஏதேனும் இருந்தனவா என்று சோதனை நடத்தப்பட்டது. ஆனால் அப்படியான எந்தவித பொருள்களும் கண்டுபிடிக்கப்படவில்லை.

எனினும் ஏதேனும் ஒரு ஒத்திகைக்காக இந்த மோதல் நிகழ்ந்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் பொலீஸார் துருவித் துருவி விசாரணை நடத்தினர். விசாரணையின் இறுதியில் அவர் விடுதலையானார்.

28 வயதுடைய இந்தப் பெண் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்றும், களுத்துறை பாடசாலை ஒன்றில் அவர் ஆசிரியையாகக் கடமையாற்றி வருகிறார் என்றும் விசாரணையில் தெரியவந்தது. (ஒ)

## இலக்கத் தகடு சோதனை

வடமராட்சி, டிச. 20
துவிச்சக்கர வண்டிகளுக்கு இலக்கத் தகடுகளை பெற்றுக் கொள்ளாதோர் மீது காவல் துறையினரும், பருத்தித்துறை பிரதேச சபை உத்தியோகத்தர்களும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதான வீதிகளில் சைக்கிள்களில் செல்வோரை வழி மறித்து இலக்கத்தகடுகள் சோதனையிடப்பட்டு வருகின்றன. (ஓ-173)

## சிறுவன் பலி

வடமராட்சி, டிச. 20
தோட்டத்தில் பட்டம் விட்டுக் கொண்டிருந்த சிறுவன் கிணற்றுக்குள் விழ்ந்து மரணமானார்.

புலோலி மேற்கைச் சேர்ந்த பத்துவயதுச் சிறுவன் ஒருவனே இவ்வாறு மரணமானவர் ஆவார். (ஒ-173)

# ராஜீவ் குடும்பத்துக்கான பாதுகாப்பு மேலும் 5 ஆண்டுகளுக்கு நீடிப்பு

## அரசமைப்பில் திருத்தம் வரும்

புதுடில்லி, டிச. 20
முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் குடும்பத்துக்கான உத்தியோகபூர்வ பாதுகாப்பை மேலும் ஐந்து ஆண்டு காலத்துக்கு நீடிக்க அரசமைப்பில் திருத்தம் கொண்டு வருமாறு நாடாளுமன்றத்தை இந்திய அரசாங்கம் கோரியுள்ளது.

ராஜீவ் காந்தியின் மனைவி சோனியாவுக்கும் அவரது இரண்டு பிள்ளைகளுக்கும் விசேட கமாண்டோ பாதுகாப்பு வழங்கப்பட்டு வந்தது. இந்த ஏற்பாடு இவ்வாண்டு டிசம்பர் 1 ஆம் திகதியுடன் காலாவதியாகியது.

விசேட பாதுகாப்புக் குழுவால் வழங்கப்படும் பாதுகாப்பு ஐந்து ஆண்டுகால எல்லையிலிருந்து பத்து ஆண்டுகளாக அதிகரிக்கப்பட வேண்டும் என்று உள்துறை அமைச்சர் சங்கர் ராவ் சவான் அரசமைப்பில் திருத்தப் பிரேரணையை மேல் சபையில் சமர்ப்பித்தார். (க)

# முன்னாள் அமைச்சர் "பொடி புத்தா" காணாமற் போய்விட்டாராம்!

## 3 வருடங்களாகத் தேடியும் பயன் இல்லை

கொழும்பு, டிச. 20
நிக்கவெரட்டிய தொகுதியின் முன்னாள் எம். பி முதியான்சே தென்னக்கோன் கடந்த மூன்று வருடங்களாகக் காணாமற் போய்விட்டார் என்று முறையிடப்பட்டுள்ளது.

பொடி புத்தா என்று அழைக்கப்பட்டு வந்த இவர் 1956 இல் எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்கா அரசில் பிரதி விவசாய அமைச்சராகவும் பதில் நிதி அமைச்சராகவும் பணியாற்றியிருந்தார்.

குருநாகலையில் உள்ள ஓர் அலுவலகத்துக்குச் சென்று விட்டு இரவுச் சாப்பாட்டுக்கு வீடு திரும்பி விடுவதாகக் கூறி இவர் 11 – 12 – 1991 அன்று காலை நிக்கவெரட்டியாவில் இருந்து புறப்பட்டுச் சென்றார் என்றும்—

பின்னர் பஸ் கிடைக்காதபடியால் தாம் அன்றைய தினம் திரும்ப முடியவில்லை என்றும் அடுத்த நாள் காலை வருவதாக தொலைபேசி மூலம் தமது மனைவிக்கு அறிவித்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதன்பின்னர் அவரைப் பற்றி தகவல் ஏதும் இன்று வரை கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

அவர் எங்கிருக்கின்றார் என்ற தகவலும் கிடைக்கவில்லை.

''அவருக்கு எதிரிகளே கிடையா. தியானங்களில் தான் அவருக்கு நாட்டம்''— என்று அவரது மனைவி தெரிவித்தார்.

''வீட்டில் இருந்து புறப்பட்ட தினம் எனது தந்தை பயணப்பை, மூக்குக்கண்ணாடி, டயறி எவற்றையும் எடுத்துச் செல்லவில்லை. தியான நிலையங்கள் எல்லாவற்றிலும் தேடி பார்த்து விட்டோம் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை'' — என்று அவரின் புதல்வியான சோமகுமாரி தென்னக்கோன் தெரிவித்தார். சோமகுமாரி இப்போது வடமேல் மாகாண சபை உறுப்பினராக இருக்கிறார். (ஒ-எ)

# பிரேமா கொலையில் 6 பேருக்கு எதிராக விரைவில் வழக்கு தாக்கல்

கொழும்பு, டிச. 20
முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா கொலை வழக்குத் தொடர்பாக காவலில் உள்ள 6 சந்தேக நபர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகைகளைத் தாக்கல் செய்ய விருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை கொழும்பு மேலதிக நீதிவான் சம்பா புத்திபால முன்னிலையில் உதவி பொலீஸ் அதிபர் முத்துபண்டா முன் கண்ட தகவலை தெரிவித்தார்.

இக் கொலை தொடர்பாக மேலும் இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட வேண்டியிருப்பதாகவும் நீதிவானிடம் தெரிவிக்கப்பட்டது.

இக்கொலை தொடர்பான விசாரணை குறித்து மேலதிக அறிக்கையை அடுத்த மாதம் 5ஆம் திகதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்படி நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (எ)

## இலவச வைத்திய பரிசோதனை

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் லயன்ஸ் வைத்திய நிபுணர்களால் பிரதி ஞாயிறு தோறும் வட்டுக்கோட்டை தொண்டேயம் கட்டடத்தில் பிற்பகல் 2 மணி முதல் 3 – 30 மணிவரை இலவச வைத்திய பரிசோதனை நடைபெறும். (க-161)

## எழுத்தறிவு வகுப்புகள்

வடமராட்சி, டிச. 20
பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய 3, 4, 5 ஆம் ஆண்டு மாணவர்களில் எழுத்தறிவில் பின்தங்கியோருக்கு எழுத்தறிவு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பிரதி திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் இவ் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. [ஒ-173]

## வடக்கு - கிழக்கில்

# சர்வோதய இயக்கம் புதிய பெயரில் இயங்கும்

சர்வோதய இயக்கம் வடக்கு – கிழக்கு பகுதிகளில் ''வடக்கு – கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம்'' என்ற பெயரில் இயங்க ஆரம்பித்துள்ளது.

இதற்கு முன்னோடி நடவடிக்கையாக சர்வோதய இயக்கத்தின் வடபிராந்திய காரியாலயத்தின் பெயர்ப் பலகை ''வடக்கு கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம்'' எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது.

அடுத்த மாதத்தில் இருந்தே மேற்படி பெயரில் சர்வோதய இயக்கம் வடக்கு கிழக்குப் பகுதிகளில் முழு அளவில் செயல்படவிருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

சர்வோதய இயக்கத்தின் தலைமைக் காரியாலயத்திற்கு வடக்கு – கிழக்கு பகுதிகளுக்கு செலவிடப்படுவதற்கென கிடைக்கும் வெளிநாட்டு நிதி உதவிகள் சரிவர வடக்கு கிழக்குக்கு அனுப்பப்படாததாலேயே வடக்கு-கிழக்கு பகுதிகளில் சர்வோதய இயக்கம் வடக்கு-கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் என்ற பெயரில் செயல்பட உத்தேசித்துள்ளதாக கூறப்படுகிறது. (எ-4)

## வாசகர் வட்ட கூட்டம்

வட்டுக்கோட்டை, டிச. 20
வட்டுக்கோட்டை பிரதேச சபை உப அலுவலக நூலக வாசகர் வட்ட கூட்டம் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு உப அலுவலக பொதுநூலக மண்டபத்தில் வாசகர் வட்டத் தலைவர் திரு. யோ. க. ஜெயராஜசிங்கம் தலைமையில் நடைபெறும். (க-161)

**வீடு தோறும் அணை அமைத்தே-நாம்**
**வீதியோரம் நீரைத் தேக்கவிடோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

1995 நாட் கலண்டர்கள், மாதப்படக் கலண்டர்கள், விற்பனைக்குண்டு. கிறிஸ்தவ படங்கள் பலரகங்கள் உண்டு. வியாபாரிகள் தங்கள் விலாசமிட்டு பதிப்பித்தும்கொள்ளலாம். விசேஷ கழிவுண்டு. குறைந்தனவே கையிருப்பில் உள்ளது. மகாலக்சுமி அச்சகம், கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (8084)

சகல பாடசாலை புத்தகங்களும் குறித்த விலையில் இருந்து 5% கழிவுடன் விற்பனையாகின்றன. பாடசாலை உபகரணங்கள், கொப்பிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன நியாய விலையில் விற்பனையாகின்றன. ஞானம் புத்தக நிலையம், நாச்சிமார் கோயிலடி, 635, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (8063)

C.50 மைக்னற் மொடல் கழுத்துச் சுவிச் உடன் விற்பனைக்குண்டு. S. நவரட்ணம், C. T. B. செருக்கப்புலவேன் (அகிலேஸ்வரன் வீதி), கோண்டாவில் கிழக்கு. (34261)

### அப்பியாசக் கொப்பி

பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகளும், ஆண்டு 1 தொடக்கம் உயர்கல்வி வரையிலான பாடப்புத்தகங்களும் மலிவு விலையில் விநியோகிக்கப்படுகின்றன. நேர அட்டவணை, கலண்டர்களும் இலவசம். அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (சி-9936

### கோழிக்குஞ்சு விற்பனை

Prima Broiler குஞ்சுகள் Christombu Golden Comet சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் பதிவுசெய்து 21-12-94 புதன்கிழமை பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, யாழ்ப்பாணம். (34249)

### விற்பனையாகிறது

சிவம் கலண்டர்கள் பொக்கற் கலண்டர்கள், வியாபாரத்திற்கு அடித்து கொடுப்பதற்குரிய சகல கலண்டர்களும், டயறிவகைகளும் விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு உண்டு. ஸ்ரீகாந்தா புத்தகசாலை, 165, மின்சார நிலையம் தலைமையகம்: மக்மிலன், யாழ்ப்பாணம். (சி-9929)

### O/L DEC. 94

நடைபெற்ற ஆங்கில வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். கூடுதல் பிரதிகள் எடுப்பவர்களுக்கு 25 வீதம் கழிவு வழங்கப்படும். Bond யாழ்ப்பாணம். (8090)

### மணமகள் தேவை

38 வயது, விசாகம் 3 ஆம் பாதம், 48 கிரக பாவம், 15 வருட ஜேர்மன் பிரஜாவுரிமையும், 5 வருட அமெரிக்கா விசாவும் யாழ். உள்ளவருக்கு மணமகள் தேவை. தொடர்பு: மதிமுகன், பழைய கண்ணாடித் தொழிற்சாலை, கோப்பாய் கிராம சபைக்கு முன்பாக. (34231)

### இலகு திருமண சேவை

31 வயது, அச்சுவினி, செவ்வாய 7, ஜேர்மனியில் தொழில்புரிபவருக்கு மணப்பெண் தேவை. விவாகமாகி அழைத்துச் செல்லலாம். மணமகன் யாழ். வந்துள்ளார். தொடர்பு: து. விமலா, யாழ் நாச்சிமார் கோயிலடி. (34262)

### தவறிவிட்டது

ஜெயராணி கருணாகரனின் 555202156V இலக்க அடையாள அட்டை 18-12-94 இரவு ஆலங்கேணியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து துரை சிவபாதம், 'சிவம் பில்டிங்', கே.கே எஸ். வீதி, இணுவில் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (34263)

450692247V இலக்க அடையாள அட்டை 14-12-94இல் நல்லூருக்கும், யாழ்/ஆஸ்பத்திரி வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து க. கனகரட்னம், இல. 14, இராச வீதி, நல்லூரில் ஒப்படைக்கவும். (34265)

## அச்சுக்கோர்ப்பாளர்

முன் அனுபவம் உள்ள அச்சுக்கோர்ப்பாளர்கள் தேவை. இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். தொழில் அனுபவம், எதிர்பார்க்கும் சம்பளத்தைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்குக.

தூர இடங்களில் இருந்து வருவோர் விரும்பின் தங்குமிட வசதி ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.

முழுமையான சுயவிவரங்களைத் தெரிவித்து 26 - 12 - 1994 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

ஆளணி முகாமையாளர்,
உதயன் வெளியீட்டகம்,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு ★ மலிவு விற்பனை ★

20-12-1994 தொடக்கம் 05-01-1995 வரை

- சாதாரண விலை:
  பம்பாய் மஸ்கட் 1kg — 200/-
  மிக்ஸர் 1kg — 180/- இன்னும் பல
- மலிவு விலை:
  பம்பாய் மஸ்கட் 1kg 120/-
  மிக்ஸர் 1kg — 150/-

குறிப்பு:
★ பம்பாய் மஸ்கட் ஒரு ஆளுக்கு 1kg மட்டும் வழங்கப்படும். மேலதிக தேவைக்கு ஓடர்செய்து பெற்றுக் கொள்ளலாம். தரத்துக்கும், சுவைக்கும், நியாயமான விலையில் வாங்கிக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்:

றெனோ சுவீற் ஹவுஸ்
45/1, டேவிற் லேன், யாழ்ப்பாணம். [8089]

## நத்தார் புது வருடத்தை முன்னிட்டு

05-12-94 தொடக்கம் 31-12-94 வரை

## மலிவு விற்பனை

சகல விதமான புடைவைகளுக்கும்
விசேட கழிவுண்டு
வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம்

லைடன் புடைவை நிலையம் (நிவகம்)
249, இராசன் வீதி (மின்சார நிலைய வீதி), யாழ்ப்பாணம்.
(சி 9925)

## மாணவர்களுக்கு ஓர் நற்செய்தி

பாலர் முதல் பல்கலை மாணவர் வரை
உங்களுக்குத் தேவையான
✶ பாடப்பயிற்சிப் புத்தகங்கள்
✶ பாடசாலை உபகரணங்கள்
அனைத்தும் நிதான விலையில் பெற்றுக்கொள்ள
புதியதோர் ஆரம்பம்
யாழ்ப்பாண பொத்தக நிலையம்
448, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், (சி/9947)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 30 — 12 — 1914



மறைவு: 30 — 12 — 1993

அமரர்
பொன்னையா செல்வத்துரை
(பாலசிங்கம்)

திதி: 20 - 12 - 1994

அன்பின் திருவுருவாய், பாசத்தின் உறைவிடமாய், குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து எங்கள் இன்பத்திலும், துன்பத்திலும் நீங்கள் உடல் சோர்ந்த நிலையிலும் மனம் சோராது நின்று எங்களுக்கு துணையிருந்த தந்தையே! எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டொன்று ஆனாலும் எம் நினைவுகளில் இருந்து வழி காட்டியாய் நிற்கும் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,

பொ. யோகராசா,
''செல்வ மஹால்''
இமையாணன்,
உடுப்பிட்டி.

# எதிர்ப்புக் குறித்து பாப்பரசருக்கு அறிவிப்பு

கொழும்பு, டிச. 20

இலங்கையில் பாப்பரசருக்கு இருந்து வரும் எதிர்ப்புக் குறித்து 'சுவர்ணஹங்ச' என்ற பௌத்த அமைப்பு மூலம் பாப்பரசருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பேராசிரியர் நளின் டி.சில்வா தெரிவித்துள்ளார்.

பாப்பரசரின் இலங்கை வருகையை நாங்கள் எதிர்க்கவில்லை.

அவர் எழுதிய நூல் ஒன்றில் பௌத்த மதம் தொடர்பாக உண்மைக்குப் புறம்பான விவரம் இருப்பதையே நாம் ஆட்சேபிக்கிறோம் என்றும் பேராசிரியர் நளின் டி.சில்வா கூறினார்.

உண்மைக்குப் புறம்பான கருத்தைத் தெரிவிக்கும் இந்த நூலை எழுதிவிட்டு பாப்பரசர் இலங்கை வருவது உகந்தது அல்ல. எனவே அவர் இலங்கை வருவதற்கு முன் அந்த நூலில் உள்ள அந்தப் பகுதிகளை வாபஸ் பெற வேண்டும்.

இப்படி பேராசிரியர் நளின் டி சில்வா மேலும் கூறினார். (இ)

# சமாதானம் காண்பதற்கு விஜயம் வழிவகுப்பதாக!

## பாப்பரசருக்குசித்ரூபானந்தா கடிதம்

வடமராட்சி, டிச. 20

தமிழ் மக்களுக்கு சமாதானம் அண்மை எதிர்காலத்தில் கிடைப்பதற்கு தங்கள் விஜயம் வழிவகுக்கும் என எதிர்பார்க்கிறோம்.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ணசாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா பரிசுத்தபாப்பரசர் ஜோன் போலுக்கு எழுதியுள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

1983ஆம் ஆண்டு முதல் தமிழ் மக்களாகிய நாம் பலவித கஷ்டங்களையும், துன்பங்களையும் அனுபவித்து வந்துள்ளோம்.

கஷ்டங்களும் துன்பங்களும் நீங்குவதற்கான சமாதானம் தோற்றுவதாக இல்லை. அரசியல்வாதிகள் சுயநலம் படைத்தவர்களாகவும், அதிகாரப் பிரியர்களாகவும் உள்ளார்கள்.

தமிழர்களாகிய நாம் எல்லாவித அடடூழியங்களுக்கும் ஆட்பட்டுள்ளோம். தங்களின் வருகை எதிர்காலத்தில் சமாதானத்துக்கு வழிகோலும் என நம்புகிறோம். (க-173)

# புதிய நாடாளுமன்றத் தொடரின் முதலாவது விவாதமாக அவசரகாலச் சட்ட நீடிப்பு

கொழும்பு, டிச. 20

புதிய நாடாளுமன்றக் கூட்டத்தொடர் அடுத்த மாதம் ஆறாம் திகதி அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கப்பட்டதும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிக்கச் செய்யும் பிரேரணையே முதலில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

பிற்பகல் ஒரு மணி முதல் இரவு 8மணி வரை இது தொடர்பான விவாதம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசு பதவியேற்ற பின்னர் நாடாளுமன்றக் கூட்டத்தொடரை அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. [எ]

# இந்தியாவின் வெளியுறவு செயலாளராக முஸ்லிம்

புதுடில்லி, டிச. 20

இந்தியாவின் வெளியுறவுச் செயலாளராக ஜனாப் சல்மான் ஹைதர் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் பதவியேற்கவிருக்கிறார்.

இந்த உயர்ந்த பதவிக்கு முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது வெளியுறவுச் செயலாளராக பணிபுரியும் திரு. கிருஷ் ஸ்ரீ நிவாசன் அடுத்த மாதம் ஓய்வு பெறுகிறார்.

அதனையடுத்தே இந்திய வெளியுறவு அமைச்சில் கிழக்கு ஆசியாவுக்கான வெளியுறவுச் செயலாளராகப் பணிபுரியும் சல்மான் ஹைதரை, புதிய செயலாளராக நியமிப்பது என்று மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

அரபு மொழியைப் பேசும் இவர், சீனா, பூட்டான், எகிப்து, ஆப்கனிஸ்தான் ஆகிய நாடுகளில் இந்தியத் தூதராகப் பணிபுரிந்தார்.

தற்போதைய வெளியுறவுச் செயலாளர் ஸ்ரீநிவாசன் பொதுநலவாய அமைப்பின் உதவிச் செயலாளர் நாயகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார். (எ)

## நிர்வாக உத்தியோகஸ்தர்

எமது நிறுவன நிர்வாகப் பணிகளை கையாளக் கூடிய அனுபவமும், ஆற்றலும் மிக்கவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர் நிர்வாகத்துறையில் குறைந்தது 10 வருட அனுபவங்களாவது கொண்டவராக இருக்க வேண்டும். மேலதிக தகைமையாக கணக்கியலில் அறிவும் அனுபவமும் உள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சுய விவரங்களுடன் 25-12-1994 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

ஆளணி முகாமையாளர்,
உதயன் வெளியீட்டகம்.
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவன மாணவர் தகவல் சேவை நிலையம்

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவன மாணவர்களாகத் தம்மைப் பதிவு செய்வோர் எமது நிறுவனத்தின் ஊடாக பதிவுகளை மேற்கொள்ளலாம். க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் 2 திறமைச் சித்திகள் பெற்றோர் பதிவு செய்யலாம். ஜூலை 1995இல் நடைபெறவிருக்கும் தகுதிச் சான்றுப்பரீட்சைக்கு (Licentiate - I) தோற்றும் மாணவர்கள் 15-01-1995இற்கு முன்னர் தம்மைப் பதிவு செய்திருக்க வேண்டும்.

தொடர்பு: இல. 140, பலாலி வீதி, திருநெல்வேலி.
(34266)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

## பட்டப்பின் டிப்ளோமா ஆங்கிலம்/ டிப்ளோமா ஆங்கிலம் பரீட்சைகள் - 1994

மேற்படி பரீட்சைக்குத் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களைப் பரீட்சைக் கிளையில் பெற்று பூர்த்திசெய்து ஒரு பாடத்திற்கு 50/- ரூபா விதம் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் செலுத்தி பற்றுச்சீட்டுடன் விண்ணப்பங்களை டிசம்பர் 27ஆம் திகதிக்கு முன்னதாகப் பரீட்சைக் கிளையில் சமர்ப்பிக்கவும். பரீட்சைகள் ஜனவரி 2ஆம் திகதி தொடக்கம் ஜனவரி 10ஆம் திகதிவரை நடைபெறும். பரீட்சை அனுமதி அட்டைகளை 28ஆம் திகதி பரீட்சைக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.

—பதிவாளர்.
(சி-10067)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை

## பல்கலைக்கழக அனுமதி 1993/94 வெற்றிடங்களை நிரப்புதல்

1993/94 கல்வியாண்டுக்கு வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி கிடைத்த மாணவர்கள் தங்கள் பதிவை அனுமதிக் கடிதத்துடன் யாழ். பல்கலைக்கழக தேர்வுக் கிளையில் 1994 - 12 - 31 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

இத்திகதிக்குப் பின்னர் பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. பதிவு செய்யாத மாணவர்களின் இடங்கள் வெற்றிடங்களாகக் கணிக்கப்பட்டு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்குப் பதிவு செய்யாத மாணவர்களின் பெயர்ப் பட்டியல் அனுப்பப்படும்.

— பதிவாளர்.
(சி/ 10066)

## AL 94, 95

துரித மீட்டல் வகுப்பு
23 - 12 - 1994 முதல்

தாவரவியல்
ஐங்கரநேசனின்
யூனிவேர்சல்
கந்தர்மடம் —— யாழ்ப்பாணம்

✶ முழுப் பாடத்திட்டமும் மீட்டல் செய்யப்படும்
✶ பகல் முழுநேர, மாலை நேர வகுப்புகள்.
(சி/10055)

## 45ஆம் நாள் நினைவலைகள்



அமரர் தவமணி காசிப்பிள்ளை

மலர்வு: 07 - 07 - 1939
உதிர்வு: 05 - 11 - 1994

கோயில் குளம் பல சென்றீரம்மா
காயம் நிலையற்றது என அறிந்தீரோ
வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தீரம்மா
மாயவுடலை காலன் கவர்ந்தாரோ
பையன்கள் மணநாளைக் கண்டு மகிழாமல்
மாய வாழ்க்கை தான் மாய்ந்த தோவம்மா
பைய பேரனையும் பார்த்துத் திளைக்காமல்
ஐயகோ மிக விரைந்து மறைந்தீரோ
வாயால் வாழ்த்துகிறோம் மனதால் வேண்டுகிறோம்.
கையால் தொழுகின்றோம் ஆத்ம சாந்திக்கே!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்புக் கணவன், பிள்ளைகள்,
மருகர், பேரன், தாய்,
தம்பி, தங்கை.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். [7839]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## அரசின் தீர்வு வெளிவந்தால்..

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையின் இரண்டாவது கட்டம் இவ்வாரம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அது ஒரு புறமிருக்க, அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள், கடிதத் தொடர்புகள் பற்றிய விவரங்களை விரைவில் வெளியிடப் போவதாக ஜனாதிபதி சந்திரிகா கடந்த வாரம் தாம் நடத்திய செய்தியாளர் மாநாடு ஒன்றில் தெரிவித்திருந்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்குடன் நடத்தப்படும் எந்தப் பேச்சுவார்த்தையும் பகிரங்கமாக்கப்படும் என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தேர்தல் காலத்திலேயே கூறிவந்தது. அந்த வாக்குறுதியைக் காப்பாற்றும் வகையில், விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளைப் பற்றிய விவரங்களை வெளியிட சந்திரிகா முன்வந்திருக்கலாம்.

நீண்ட நாள் பிரச்சினை ஒன்று சம்பந்தமாக, தீர்வு ஒன்றைக் காண்பதில் மிகவும் சிக்கல் நிறைந்த விவகாரம் தொடர்பாக —

தீர்வு ஒன்று வரக் கூடாது என்று விரும்பும் பல தீய சக்திகள் வெளியே காத்துக் கொண்டிருக்க —

சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள இரண்டு தரப்பினரும் பேசிக் கொண்டவற்றை, பரிமாறிக் கொண்ட விவரங்களை பகிரங்கப்படுத்துவது உகந்ததா என்பது தனியாக ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும். அதனால் ஏற்படும் நன்மையை விட, தீமையே அதிகம் என்பதனை மட்டும் சுட்டிக் காட்டலாம்.

இது இவ்வாறிருக்க இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை முன் வைப்பதற்கான முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது; இது பற்றிய அறிவிப்பு ஒன்றை அரசாங்கம் விரைவில் வெளியிடும்; என்றும் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் தன்வசம் வைத்திருக்கும் தீர்வு எத்தகையது என்பதனை அறிவதற்குத் தமிழ் மக்கள் மட்டுமன்றி சிங்கள மக்களும் ஆவலோடு உள்ளார்கள்,

தமிழர்களின் கோரிக்கை வெளிப்படையானது. தாம் சுதந்திரமாகவும், கௌரவமாகவும், பாதுகாப்பாகவும் வாழ்வதற்கு வகை செய்ய வல்ல தன்னாட்சியை, தங்கள் பூர்வீக தாயகத்தில் நிறுவ வேண்டும் என்பதே அவர்களது அபிலாசை.

இந்த அபிலாசையை ஈடு செய்யும் விதத்தில் அல்லது அதற்கு நெருங்கக் கூடிய ஒரு தீர்வை அரசு வழங்குமா என்பதனை அறிவதில் தமிழர்கள் ஆர்வமாக உள்ளார்கள்.

அதேவேளை, தமிழர்களுக்கு அதிகமாக ஏதாவது கொடுக்கப்பட்டுவிடுமா என்று சிங்களத் தீவிரவாதிகள் கழுகுக் கண்ணோடு காத்துக் கொண்டிருக்கிறார்கள்!

எனவே இனப் பிரச்சினை குழப்பம் எதுவுமின்றித் தீர்த்து வைக்கப்படுவதற்கு, நியாயமான, காத்திரமான ஒரு தீர்வு முன் வைக்கப்பட்டால் மட்டும் போதாது. அதனை நடைமுறைப்படுத்தக் கூடிய செய் திறமையும் அரசியல் துணிவும் தேவை.

வடக்கு-கிழக்கில் நிலவுவது இனப்பிரச்சினையே; பயங்கரவாதப் பிரச்சினையல்ல; இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றே காணப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை நாம் எடுப்போம்— என்று தேர்தல் காலத்தில் கூறியவர்கள் பொது மக்கள் ஐக்கிய முன்னணியினர். அந்த வேளையிலேயே, தாம் உத்தேசித்துள்ள தீர்வு என்ன என்பதனை அறிவித்துப் பதவிக்கு வந்திருந்தால், காரியம் இலகுவாகியிருக்கும்.

ஆனால் அவ்வேளை தமது உத்தேச திட்டத்தைத் தெரிவித்திருப்பின், பதவிக்கு வருவது சந்தேகமாகிவிடும் என்று எண்ணியே அவர்கள் எதனையும் வெளியிடவில்லை. அரசு தனது உத்தேச தீர்வை இப்போது வெளியிட முன்வந்திருப்பது இருபக்க விளைவுகளை உண்டாக்கும். சாதகமாகவும் அமையலாம்; ஒரேயடியாகப் பாதகமாகவும் மாறலாம்!

# செசின்ய தலைநகர் குறொஸ்னி மீது ரஷ்ய விமானங்கள் குண்டு வீச்சு!

## மக்கள் அகதிகளாக வெளியேறுகின்றனர்

குறொஸ்னி, டிச. 20

செசின்யாவின் தலைநகரான குறொஸ்னி மீது ரஷ்ய விமானங்கள் குண்டு வீச்சு நடத்தி உள்ளன.

செசின்ய பிரிவினைவாதிகள் தமது ஆயுதங்களைக் கையளிப்பதற்கு ரஷ்ய அரசாங்கம் கடந்த சனிக்கிழமை இரவு வரைகாலக்கெடு விதித்திருந்தது.

இந்தக் காலக்கெடு முடிவடைந்ததை அடுத்தே ரஷ்ய குண்டுவீச்சு விமானங்கள் குறொஸ்னி மீது தாக்குதல் நடத்தி உள்ளன.

பிரிவினை வாதிகள் ஆயுதங்களை ஒப்படைக்காவிடில் தாக்குதல் நடத்தப்படும் என்று ரஷ்ய அரசாங்கம் ஏற்கனவே எச்சரித்திருந்தது.

அதேசமயம் ரஷ்யாவின் விமானத்தாக்குதலை அடுத்து பெரும் எண்ணிக்கையான மக்கள் செசின்யாவை விட்டு வெளியேறி வருகின்றனர்.

பலர் தமது வாகனங்களில் அண்டையில் உள்ள குடியரசுகளுக்குச் சென்றுகொண்டிருப்பதாகவும் இப்படிச் சென்று கொண்டிருந்தவர்கள் மீதும் ரஷ்யப்படையினர் தாக்குதல் நடத்தி உள்ளனர். என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் வெளியேறியதைத் தொடர்ந்து சுமார் 4லட்சம் மக்கள் வாழ்ந்த குறொஸ்னி நகரம் வெறிச்சோடிக் கிடப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் இப் பிரச்சினையை சமாதானமான முறையில் தீர்த்து வைக்குமாறு ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ்யெல்ட்சினை முஸ்லிம் நாடான துருக்கி கோரி உள்ளது.

செசின்யாவில் பெரும்பான்மை மக்கள் சுனி முஸ்லிம்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ)

# நத்தார் தாத்தாவாக பிடல் காஸ்ட்ரோ!

## கிளின்ரனுக்கும் வாழ்த்து மடல்

மெட்றிட், டிச. 20

கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோவை நத்தார் தாத்தாவாகச் சித்திரிக்கும் நத்தார் வாழ்த்து மடலை அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனுக்கு ஸ்பெயின் மேயர் அனுப்பி வைத்துள்ளார்.

இப்படி 2,000 வாழ்த்து மடல்கள் ஸ்பெயின் மேயரினால் அச்சிடப்பட்டுள்ளன.

இந்த வாழ்த்து மடலில் பிடல் காஸ்ட்ரோ அவரது வழமையான புகழ் பெற்ற நரைத்த தாடியுடன் முதுகில் நத்தார் தாத்தா சுமந்து செல்வது போன்ற மூடையுடன் காணப்படுகிறார்.

அந்த மூடையில் பெரிய எழுத்துக்களில் ''சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் ஒருமைப்பாடு'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வாழ்த்துமடல்கள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ ஐ. நா பொதுச்செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ் காலி, ஸ்பெயின் பிரதமர் பிலிப்போ கொன்ஸா வெஸ் உட்பட உலகின் பல தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

''எனது செய்தி தெளிவானது. சமாதானம், நல்லெண்ணம் சம்பந்தப்பட்ட ஒரு செய்தியை நான் முழு உலகுக்கும் அனுப்பி வைக்க விரும்புகிறேன்'' என்று ஸ்பெயின் மேயர் தெரிவித்துள்ளார்.

(இ)

## தமிழ் - சிங்கள நாடகவிழா கொழும்பில் நடைபெற்றது

கொழும்பு, டிச. 20

பிரபல சிங்கள நாடகக் கலைஞர் சோமலதா சுபசிங்கவின் மாணவர்களுடன் இணைந்து யாழ். திருமறைக் கலாமன்ற மாணவர்கள் நடத்திய தமிழ் சிங்கள நாடக விழா கடந்த 14 ஆம், 15 ஆம் திகதிகளில் கொழும்பு ஜோன் டி சில்வா மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவில் சோமலதா சுபசிங்க உரை நிகழ்த்திய போது கூறியதாவது;

கொழும்பில் நாம் பல வசதிகளுடன் வாழ்கின்றோம். வட பகுதியில் நடைபெறும் யுத்தம் காரணமாக அங்குள்ள மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ் வேளையில் அங்கிருந்து சுமார் 36 மணி நேரப் பிரயாணத்தில் இங்கு வந்துள்ள யாழ். திருமறைக் கலாமன்ற மாணவர்கள் சமாதானத் தூதுவர்களாக இங்கு வந்துள்ளனர்.

இவர்களை நாம் பெரிதும் வரவேற்கின்றோம். இச் சிறார்களும் எமது மாணவரும் ஒன்றாக ஒரே மேடையில் இரு இனச் சபையோர் முன்னிலையில் நாடகங்களை நடத்துவது மிகவும் பாராட்டத்தக்கது என்றார் அவர்.

சோமலதா சுபசிங்க வட கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் திரு. லயனல் பெர்னாண்டோவின் துணைவியார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

### மாத்தறை மாவட்டத்தில்

## திருமணமாகாத நிலையில் 2 லட்சம் யுவதிகள்

மாத்தறை, டிச. 20

மாத்தறை மாவட்டத்தில் விவாக வயதை அடைந்தும் திருமணம் செய்யாதிருக்கும் இளம் பெண்களின் எண்ணிக்கை 2 லட்சம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இம்மாவட்டத்தில் விவாக வயது 25 முதல் 39ஆக இருக்கிறது.

இந்த வயதுடைய யுவதிகள் இப்பகுதியில் இரண்டு லட்சத்துக்கும் அதிகமாக இருக்கின்றனர்.

அதே வயதுடைய இளைஞர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்துக்குக் குறைவாக இருப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலப் பயங்கரவாதச் சம்பவங்களின் போது பெரும்பாலான இளைஞர்கள் காணாமல் போயுள்ளதும் கொலை செய்யப்பட்டிருப்பதும் இதற்கு முக்கிய காரணமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

### யாழ். மாவட்டத்தில் அனர்த்தங்களால்

# 94 பாடசாலைகள் கைவிடப்பட்டு செயலற்ற நிலையில்!

வலிகாமம் தெற்கு, டிச, 20

யாழ்ப்பாண மாவட்ட கல்வித் திணைக்கள வலயம் ஒன்றில் 37 பாடசாலைகளும், வலயம் இரண்டில் 57 பாடசாலைகளும் அண்மைக் காலங்களில் ஏற்பட்ட அனர்த்தங்களால் முற்றாகக் கைவிடப்பட்டு செயலற்ற நிலையில் உள்ளன.

யாழ்ப்பாணம் கல்வி வலையம் இரண்டின் கல்விப்பணிப்பாளர் திரு. க. கந்தசாமி இதனை தெரிவித்தார்.

மேலும், கல்வி வலயம் ஒன்றில் 47 பாடசாலைகளும், வலயம் இரண்டில் 188 பாடசாலைகளுமாக மொத்தம் 235 பாடசாலைகள் சேதமுற்ற நிலையிலும் உள்ளன.

பாடசாலைகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் காரணமாகவும், முற்றாக கைவிடப்பட்ட நிலையில் உள்ள பாடசாலை இழப்புக்களாலும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது 43 ஆயிரத்து 500 வரையான மாணவர்கள் வகுப்பறை வசதிகள் இல்லாமல் உள்ளனர்.

இவற்றைவிட, கடந்த கால சம்பவங்களால் குடாநாட்டில் பாடசாலைகளில் இருந்து களவாடப்பட்ட அல்லது தொலைந்து போன அல்லது சேதமுற்ற தளபாடங்களின் பெறுமதி இரு வலயங்களிலும் உள்ளடக்கி பல இலட்சம் ரூபாக்களாகும்.

தீவுப் பகுதிகளில் இருந்து 17 ஆயிரத்து 91 மாணவர்களும் வலிகாமம் வடக்கு, வடமராட்சி கிழக்கு பகுதிகளில் இருந்து 15 ஆயிரத்து 113 மாணவர்களும் தற்போதைய மதிப்பீட்டின்படி இடம் பெயர்ந்துள்ளனர் — என்றும் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (ஒ-152)

## இலவசமாக தென்னங்கன்று

சண்டிலிப்பாய், டிச. 20

வலி-தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவில் கிராம அலுவலர்கள் பிரிவு ரீதியாக நல்ல இன தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது.

இரண்டரை வருடத்தில் காய்க்கக்கூடிய இந்த தென்னங்கன்றுகளை வறுமை நிலையிலுள்ளவர்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-135)

## விடுதலைப் புலிகளுடன் பேச முஸ்லிம் காங்கிரஸ் தயார்

### துணைத் தலைவர் அறிக்கை

மட்டக்களப்பு, டிச. 20

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வாழும் சமூகங்களின் தனித்துவம், பாதுகாப்பு, பிரதேச உரிமைக்கான உத்தரவாதங்கள் ஆகியன அடங்கிய முறையில் உருவாக்கப்படும் சமஷ்டி ஆட்சி ஒன்றினை ஏற்படுத்தும் பொருட்டு விடுதலைப் புலிகளுடன் பேசத் தயாராக உள்ளோம். இதன்மூலம் எமது ஒன்றிணைந்த அரசியல் சக்தியை வெளிப்படுத்த முடியும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் துணைத் தலைவர் மருதூர்க்கனி இவ்வாறு அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அறிக்கை மேலும் கூறுவதாவது;

''தமிழ் பேசும் மக்கள்'' என்ற அடிப்படையில் தமிழ் முஸ்லிம் சமூகங்கள் ஒரேவகையான பிரச்சினைகளையே பெரும்பாலும் எதிர்நோக்கியுள்ளன. ஆகவே இந்த விவகாரத்தில் நாம் ஒன்றித்துக் குரல் எழுப்பி எமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதே பொருத்தமானது.

புலிகள் இயக்கம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை முஸ்லிம்களின் பிரதிநிதியாகப் பார்ப்பது போன்றே நாம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தமிழ்பேசும் மக்களின் பிரதான சக்தியாகக் கணிக்கிறோம். ஆகவே அவர்களுடன் அரசாங்கம் பேச்சு நடத்தாமல் எந்தத் தீர்வையும் காணமுடியாது என்றும் அவர் தெரிவித்தார். (க)

## 319 பேருக்கு மலேரியா

யாழ்ப்பாணம், டிச. 20

யாழ். மாநகரப் பகுதியில் கடந்த நவம்பர் மாதம் மட்டும் 319 பேர் மலேரியா காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களில் மூன்று பேர் மூளை மலேரியாவினால் பீடிக்கப்பட்டு யாழ். பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று சென்றிருப்பதாக சுகாதார பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஒ-17)

# முழுமையான சமஷ்டி ஆட்சி மூலமே தமிழர் பிரச்சினையை தீர்க்க முடியும்

## அமைச்சர் பீரிஸிடம் ஜோஸப் பரராஜசிங்கம் தெரிவிப்பு

ஒற்றையாட்சி அரசமைப்பை மாற்றி முழுமையான சமஷ்டி அமைப்பிலான அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதன் மூலமே தமிழ் பேசும் மக்களுடைய பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

கடந்த 13 ஆம் திகதி நிதி, அரசமைப்பு விவகார அமைச்சரும்பிரதிநிதிஅமைச்சருமான ஜி. எல். பீரிஸை அவரது நிதி அமைச்சு அலுவலகத்தில் சந்தித்து உரையாடிய மட்டக்களப்பு மாவட்ட முதன்மை நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்றத் தலைவருமான ஜோசப் பரராஜசிங்கம் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

எவ்வளவு தூரம் அதிக அளவிலான அதிகாரப் பரவலாக்கல்களைச் செய்தபோதிலும் ஒற்றையாட்சி முறை இருக்கும் வரை தமிழ் பேசும் மக்களுடைய அரசியல் பொருளாதார அபிலாஷைகளை நிறைவேற்ற முடியாது எனவும் அவர் எடுத்துரைத்தார். (க)

# பரவிவரும் நெருப்புக் காய்ச்சலை வருமுன் காப்பதே ஆபத்தை நீக்கும்

யாழ். குடாநாட்டில் நெருப்புக் காய்ச்சல் வேகமாக பரவுகிறது என சுகாதார வட்டாரங்களில் இருந்து அறிய வருகின்றது. இந்த நோய் வராமல் தடுப்பதற்கான வழிமுறைகள் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளன.

**வைத்திய கலாநிதி பி.ரமணீகரன்**

நெருப்புக்காய்ச்சல் 'டைபோயிட் பீவர்' (Typhoid Fever) என்றும் அழைக்கப்படும்.

இதில் 'பரா தைபோயிட் காய்ச்சல்' (Para Typhoid Fever) என்றும் இன்னொரு வகை இருக்கின்றது.

இந்த நெருப்புக்காய்ச்சலை எமக்கு ஏற்படுத்துகின்ற கிருமிக்குப் பெயர் 'சல்மொனெல்லாடைபி' (Salmonella Typhi) என்பதாகும்.

'பரா தைபோயிட்' என்கிற துணை நெருப்புக்காய்ச்சலை ஏற்படுத்தும் கிருமிக்குப் பெயர் சல்மொனெல்லா பரா தைபோயிட் என்பதாகும்.

ஏனைய கிருமிகள் போன்று அல்லாமல் இந்த நெருப்புக் காய்ச்சலுக்குரிய கிருமிகள் மனிதனில் மாத்திரமே தேங்கி நிற்பவை. அதாவது மனிதனுடைய உணவுக் கால்வாயிலுள்ள சிறுகுடலிலும் பித்தப்பையிலும் இவை தங்கி நிற்கும்.

எனவே மனிதன் மலம் கழிக்கின்றபோது இந்தக் கிருமிகள் மலத்துடன் வெளியேறி மண்ணை அடையும்.

### மலசல கூடத்தை பயன்படுத்தவேண்டும்

எனவே தான் மலத்தை அது குழந்தையாக, சிறு பிள்ளையாக, வாலிபராக, வயது முதிர்ந்தவராக யாராக இருந்தாலும் எப்போதுமே எங்கேயுமே மலசல கூடத்தை பயன்படுத்துவது நல்லது,

அது நிரந்தரமாக அல்லது வசதிக்கும் தேவைக்கும் ஏற்ப நான்கு அடி ஆழத்தில் தோண்டப்பட்ட தற்காலிகமானதாகவும் இருக்கலாம்.

அதுவும் இன்று குறிப்பாக மழைக்காலத்தைக் கருத்தில் கொள்ளுகின்றபோது மழை வெள்ளமானது ஆங்காங்கே விடப்படுகின்ற மலங்களையும், எச்சங்களையும், கழிவுகளையும் கழிவிக்கொண்டு வருவதை நாம் அறிவோம்.

எனவே அழுக்கான இந்த மழை வெள்ளம் கிணற்று நீரை மாசுபடுத்துகின்ற போது அதனை நாம் நேரடியாகக் குடிப்பதற்குப் பயன்படுத்துகின்ற போது நெருப்புக்காய்ச்சலுக்குரிய கிருமிகள் எமக்குத் தொற்றுகின்றன.

இதனால் தான் நாம் குடிப்பதற்குப் பயன் படுத்துகின்ற நீரை திறந்த கிணறு, குளம் போன்றவற்றிலிருந்து பெறுகின்ற போது அதனை நன்கு கொதிக்க [illegible] வைத்து வடிகட்டி சுத்தமாக பாத்திரத்தினுள் சேகரித்து அதனையே குடிப்பதற்கு பயன்படுத்தல் வேண்டும்.

### கொதித்து ஆறிய நீர் குடிப்பது நல்லது

எங்காவது புதிய இடங்களுக்குப் போகின்ற போது முடியுமானளவிற்கு கொதித்து ஆறிய நீர் கொண்டு செல்லுதல் வேண்டும்.

ஏனெனில் நீரை நன்கு கொதிக்க வைத்துக் கொள்கிற போது எமக்கு நெருப்புக் காய்ச்சலை ஏற்படுத்தும் கிருமிகள் முற்றாக அழிக்கப்பட்டு விடும்.

தண்ணீரை இலேசாக சுட வைப்பதனால் எதுவித பயனும் இல்லை, நீர் கொதித்து 100 பாகையை அடைகின்ற போதுதான் நோய்க் கிருமிகள் அழிக்கப்படும்.

நன்கு கொதிக்க வைத்த நீருக்குள் நீர் குடிப்பதற்கு சூடாக இருக்கின்றதே என்பதற்காக குளிர் (பச்சைத்தண்ணீர்) நீரைக் கலப்பதையும் [illegible]

### சுத்தம் அவசியம்

[illegible] நகங்களை அடிக்கடி வெட்டி சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

மலம் கழித்த பின்னரும் சாப்பிட முன்னரும் சவர்க்காரம் இட்டு கைகளை நன்கு கழுவுதல் வேண்டும்.

பலருக்கு சமையலில் ஈடுபடுபவர்களும் சமைத்த/தயாரிக்கப்பட்ட உணவினை காவிச் செல்வோரும், பொதிகள் கட்டுவோரும் சுத்தமாக இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

இவ்வாறான வேலைகளில் ஈடுபட முன்னர் சவர்க்காரம் இட்டு குளிப்பது நல்லது. தோய்த்து உலர்ந்த ஆடையை அணிவது நல்லது. அழுக்கான வேலை ஏதேனும் இடையில் செய்தால் கைகளை நன்கு சவர்க்காரம் இட்டு கழுவிய பின்னரே ஏனைய உணவுத் தயாரிப்பு, பராமரிப்பு வேலைகளில் ஈடுபடுதல் வேண்டும்.

சமைத்த உணவுகளை எப்போதுமே சுத்தமாக பாத்திரங்களில் சேகரிக்க வேண்டும். ஈக்கள், இலையான்கள் அமையாமல் நன்கு மூடி வைக்க வேண்டும்.

உணவகங்கள் வெதுப்பகங்கள், சிற்றுண்டிச்சாலைகள் என்பவற்றில் உணவினை [illegible]கள், இலையான்கள் அமைந்தால் அவற்றை உண்ணுவதைத் தவிர்க்க வேண்டும்.

சமையலில் ஈடுபடுகின்ற உணவுகளை கையாளுகின்ற, பரிமாறுகின்ற எவருக்குமே தலையிடி, காய்ச்சல், வயிற்றோட்டம், இருமல் என ஏதேனும் இருந்தால் அவர் அதில் ஈடுபடுவதைத் தற்காலிகமாக சுகமடையும்வரை தவிர்த்தல் வேண்டும்

சமைத்தவுடன் உணவுகளை உண்ணுவது நல்லது. பழைய உணவுகள், பழுதடைந்த உணவுகள் என்பவற்றை தவிர்ப்பது நல்லது.

### சரியான சிகிச்சை பெற வேண்டும்

நெருப்புக் காய்ச்சலுக்கான அறிகுறிகளான தலையிடி, காய்ச்சல், சோர்வு, களைப்பு, வயிற்று நோ, வயிற்றுவலி, வயிற்றோட்டம், சலம் மஞ்சளாகப் போதல் என ஏதேனும் இருந்தால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறுவது நல்லது. சரியான சிகிச்சையை ஆரம்பத்திலேயே பெற வேண்டும்.

விசேட இரத்தப் பரிசோதனை மூலம் நோயின் நிலைமையை உறுதி செய்வதோடு நோய் எவ்வளவிற்கு மோசமடைந்துள்ளது என்பதனையும் அறிந்து கொள்ளலாம்.

இரத்தப் பரிசோதனைக்கு வசதி வாய்ப்புக்கள் இல்லாத போது மருத்துவ சரித்திரம் உணவுப் பழக்க வழக்கம், சுகாதாரம் தேவைப்படுகின்ற முறை, குடிநீர், மலகூட வசதி என்பவற்றைக் கேட்டறிந்து உடலை மருத்துவ ரீதியாகப் பரிசோதித்து மருத்துவ அறிவையும் அனுபவத்தையும் பயன்படுத்தி சிகிச்சையை ஆரம்பத்திலேயே ஆரம்பிக்கலாம்.

குளோரம் பெனிக்கோல் என்கின்ற குளிசை வயது வந்தவர்களுக்கு ஆறு மணித்தியாலங்களுக்கு ஒரு முறை 500 மில்லி கிராம் வீதம் ஒரு கிழமைக்கும், 250 மில்லி கிராம் வீதம் ஆறு மணித்தியாலங்களுக்கு ஒரு முறை அடுத்த கிழமைக்கும் கொடுத்தல் வேண்டும்.

பக்றிம், கொட்றிம், செப்றிம் குளிசைகளை இரண்டு வீதம் ஒரு கிழமைக்குக் கொடுக்க வேண்டும்.

நோய் ஏற்பட்டவர் ஏனையவரிடமிருந்து குளிசை மருந்துகள் முடியும் வரை ஆறுதல் ஓய்வு எடுப்பது நல்லது.

நோய் இருக்கின்ற போது இறைச்சி, முட்டை, பால் போன்ற புரதச் சத்து உணவுகளை தவிர்க்க வேண்டும்.

இளநீர், கஞ்சி, பாயாசம், சூப் போன்றவை நன்கு பருக வேண்டும்.

வயிற்றில் கடுமையான நோ, வலி ஏற்பட்டு வாந்தி, மலத்துடன் இரத்தம் போதல் கறுப்பாகப் போதல் என ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் உடனடியாக யாழ். போதனா மருத்துவமனைக்கு அழைத்து சத்திர சிகிச்சை நிபுணரின் ஆலோசனை பெறுவது நல்லது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

எமது கல்லூரியின் மேம்பாட்டு நிதி உதவிக்காக 1994—12—28 இல் நடத்தப்பட இருந்த அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களால் 1995 ஆம் ஆண்டு புனித பத்திரிசியார் நாளுக்கு (மார்ச் 17) பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

அ. சந்தியாப்பிள்ளை
பொதுச் செயலாளர்

Patrician Institute,
59, St. Patrick's Road,
Jaffna.

(சி/10070)



தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

## முக்கிய அறிவித்தல்

வலிகாமப் பிரிவில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்களின் உதவித்தொகைகள் 20-12-94 இல் இருந்து 23-12-94 வரை 19, செம்மணி வீதியில் இயங்கும் தனியார் கல்விப் பிரிவில் ஏற்கப்படும்.

தலைவர்
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்.

[சி/10071]


## மரண அறிவித்தல்கள்

### வல்லிபுரம் சிவராசா
(கணக்காளர்)

வல்லிபுரம் சிவராசா லண்டனில் 17-12-1994இல் (சனிக்கிழமை) காலமானார்.

அன்னார் கரவெட்டி சாமியன் அரசடியைச் சேர்ந்த வல்லிபுரம் சிவகாமி தம்பதிகளின் நான்காவது புதல்வனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சுரேஷ் (Supervisor Nursing Home, லண்டன்), ரமேஷ் (டாக்டர் லண்டன்), நிரேஷ் (உயர்தர மாணவன் லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அல்வாய் காலஞ்சென்ற ஆ. கணபதிப்பிள்ளை (அதிபர்) செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற சிவஞானம் (பிரதம லிகிதர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை, பருத்தித்துறை), சிவகுரு (கட்டைவேலி ப.நோ.கூ.சங்கம்), தவராசா, சிவயோகநாதன், சிவபாக்கியம்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவசுப்பிரமணியத்தின் மைத்துனரும், மாணிக்கநாயகம் (K. K. S. சிமெந்து தொழிற்சாலை ஓய்வுபெற்ற Chemist), சபாநாயகம் (ஆங்கில ஆசிரியர்), சிவானந்தநாயகம் (பலாலி ஆசிரியர் கலாசாலை ஓய்வுபெற்ற விரிவுரையாளர்), காலஞ்சென்ற பத்துமநாயகம் (லண்டன் - ஓய்வுபெற்ற ஆசிரியர் யாழ். இந்துக் கல்லூரி), மகேந்திரநாயகம் (அல்வாய்), மகேஸ்வரதேவி (ஆசிரியை அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும், தில்லைநாதனின் (கணக்காளர் அவுஸ்திரேலியா) சகலனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

தகவல்:
வ. தவராசா
(சகோதரர்)

37/1 றக்கா லேன்,
யாழ்ப்பாணம்.

(34264)

### மாரிமுத்து கந்தையா
(தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை ஓய்வுபெற்ற ஊழியர்)

அளவெட்டி வடக்கு செட்டிச்சோலையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட மாரிமுத்து கந்தையா அவர்கள் 10-12-94 இல் இந்தியாவில் (சென்னை, கொட்டுவாக்கம்) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்து — பார்வதி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தையா — பூரணத்தின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை, நவரத்தினம், சிவராசா, இரத்தினராசா, தனலக்சுமி, இராசலக்சுமி, செல்வநாயகம், ஜெயலக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கலாதேவி, கலைவாணி, கலைமதி, அமுதா ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசுந்தரம், சுகிர்தகுமார், விஜயகுமார் ஆகியோரின் மாமனாரும், ஆதவன், பிரார்த்தனா, பிரசாந் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இந்தியாவில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
பா. கலாதேவி
(மகள்)

காளியவத்தை,
மலைவேம்படி,
அளவெட்டி தெற்கு.

(34273)

### வைரமுத்து வாசுதேவன் (வாசு)
(கட்டட மேற்பார்வையாளர் கரம் நிறுவனம், கௌரவ பொருளாளர் ஸ்ரீ மீனாட்சி அம்பாள் சி. க. கூ. சங்கம்]

நீர்வேலி மேற்கு மாசிவனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி, வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும், முன்னாள் ஆய்வு நிறுவன புத்தூர் பிரதேச இணைப்பாளரும் ஆகிய செல்வன் வைரமுத்து வாசுதேவன் 19-12-94 நேற்று காலமானார்.

இவர் வைரமுத்து - நாகரத்தினம் தம்பதிகளின் செல்வப்புத்திரனும், சேதுராசா (பாரெய்ன்), பலராமன், நாகேஸ்வரி, விஜயரங்கன், விஷ்ணு (டென்மார்க்), விஜயகுமார்(பாரெய்ன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், லதா, குகனேசன் (ஈழநாதம் வன்னிப் பதிப்பு) ஆகியோரின் உடன் பிறவாத சகோதரனும், இந்திராணி, தவமலர், காராளசிங்கம் (பாரெய்ன்), நாகேஸ்வரி, கணநாதன் (பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்) ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
குணசிங்கம் கணநாதன்
(மைத்துனர்)

நீர்வேலி மேற்கு

(34271)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற் லிமிற்டெட்டினரால்) யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 20—12—94 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

நீரினால் நோய்கள் வேகமாகப் பரவுகின்றன

# குறைந்தது 20 நிமிட நேரத்துக்கு கொதித்து ஆறிய நீரையே பருகுங்கள்

## தமிழீழ சுகாதார பகுதியினர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், டிச. 20

அண்மையில் பெய்த பருவ மழையைத் தொடர்ந்து நீரினால் பரவிவரும் நோய்களைக் கட்டுப்படுத்த குறைந்தது 20 நிமிடங்களுக்கு கொதித்து ஆறிய நீரை அருந்துமாறும், உணவு வகைகளை நன்குசமைத்து உண்ணுமாறும் தமிழீழ சுகாதார சேவைப் பகுதியினர் மக்களை கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக தமிழீழ சுகாதார சேவைப் பகுதியினரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நீரினால் பரவும் நோய்கள் குறிப்பாக நெருப்புக் காய்ச்சல், வயிற்றோட்டம் என்பனவற்றுடன் மலேரியாவும் தமிழீழத்தின் பல பகுதிகளிலும் அதிகரித்துக் காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இவற்றின் தாக்கத்தில்இருந்து மக்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள அடிப்படைச் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

நீரினால் பரவும் நோய்களாகிய நெருப்புக் காய்ச்சல், வயிற்றோட்டம் முதலியவற்றைக் கொதித்தாறிய நீரை மட்டுமே அருந்துவதன் மூலம் கட்டுப்படுத்த முடியும். எனவே, ஆகக் குறைந்தது 20 நிமிடங்கள் கொதித்து ஆறிய நீரையே அருந்தும்படியும், உணவு வகைகளை நன்கு சமைத்து உட்கொள்ளும்படியும் சகல மக்களையும் தமிழீழ சுகாதார சேவைகள் பகுதியினர் கேட்டுக்கொள்கின்றார்கள்.

குழாய்க் கிணற்றின் நீர், குளோரின் இடப்பட்ட நீர் என்பன கிருமிகள் அற்றது என்ற கருத்துத் தவறானது. இவற்றில் கிருமிகளின் அளவு குறைவாக இருக்கின்றபோதிலும், குடிநீராக இவற்றைப் பாவிக்கும்போது கொதித்து ஆறிய பின்னரே பருக வேண்டும்.

மழையைத் தொடர்ந்து நுளம்பின் பெருக்கத்தினால் மலேரியாவின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனைக் கட்டுப்படுத்த உங்கள் வளவுகளில் நீர் தேங்கி நிற்கும் சிறு பள்ளங்களை மூடியும், சிரட்டைகள், இறந்த ரின்கள், பழைய டயர்கள் முதலியவற்றைப் புதைத்தும், குடம்பிகள் தேங்கியுள்ள நீர் நிலைகளில் வாகனக் கழிவு எண்ணையை ஊற்றி எண்ணைப்படலம் ஒன்றை ஏற்படுத்தியும், பாவனையில் உள்ள குளங்களில் குடம்பியை உண்ணும் நன்னீர் மீன்களான யப்பான் மீன் முதலியவற்றை வளர்த்தும் பங்களிப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும், நுளம்பின் தாக்கத்தைக் குறைப்பதற்குப் புகையிடுதல், நுளம்பு வலை, நுளம்புத்திரி, புல்லெண்ணை முதலியவற்றை உபயோகிக்கும் படியும், வீடுகளிலும் நுளம்புகள் உட்புகக்கூடிய பாதைகளை மாலையிலேயே அடைத்து வைக்கும் படியும் சகல மக்களையும் தமிழீழ சுகாதார சேவைகள் பகுதியினர் கேட்டுக்கொள்கின்றனர். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ஐ]

# தீவுப்பகுதி கிராம சேவையாளர் விவகாரம் அமைச்சரவைக்கு

யாழ்ப்பாணம், டிச 20

தீவுப்பகுதிக்கு கிராம சேவையாளர்களாக நியமிக்கப்பட்ட 20 பேரும் தமது கடமைகளை பொறுப்பேற்பதில் உள்ள முட்டுக்கட்டை இன்னும் நீக்கப்படவில்லை.

இது விடயம் அமைச்சரவைக்கு எடுத்துச் செல்லப்பட இருப்பதாகவும் அங்கு வைத்தே தீர்வு காணப்பட இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

கிராம சேவையாளர்களாக நியமனம் பெற்றும் பதவி ஏற்க முடியாத இவர்களின் பிரதிநிதிகள் அண்மையில் கொழும்பில் கூட்டுறவு மாகாண சபைகள் சுதேச மருத்துவத்துறை அமைச்சரின் செயலாளரைச் சந்தித்து தமக்கு ஏற்பட்டுள்ள நிலைமையை எடுத்துக் கூறியுள்ளனர்.

அதனையடுத்தே இவ் விடயம் அமைச்சரவைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது.

20 கிராம சேவையாளர்களும் தமது நிலைமையை விளக்கி ஜனாதிபதி மற்றும் அமைச்சர் அமரசிறி தொடங்கொடவுக்கும் மகஜர்களை அனுப்பி வைத்துள்ளனர்.

தீவுப்பகுதியில் ஈ.பி.டி.பியினரால் நியமிக்கப்பட்ட 13 கிராம சேவையாளர்கள் கடமையில் உள்ளனர்.

போட்டிப் பரீட்சை மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைய நியமனம் பெற்ற புதிய கிராம சேவையாளர்கள் அங்கு சென்றால் —

தம்மால் நியமிக்கப்பட்டவர்களின் பதவிகள் பறிபோய் விடும் என்ற அச்சத்தினாலேயே, ஈ. பி. டி. பி. யினர் புதியவர்களை தீவுப்பகுதிக்குச் செல்லவிடாது திருகோணமலையில் தடுத்து நிறுத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நியமனம் கிடைத்தும் தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொள்ள முடியாது உள்ள மேற்படி கிராம சேவையாளர்கள், யாழ். அரச அதிபரை நேற்று செயலகத்தில் சந்தித்து தமது நிலமையை எடுத்துக் கூறி ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரின் பிரதியையும் கையளித்தனர்.

அரச அதிபர் கொழும்பில் இவ்விடயம் தொடர்பாக மாகாண சபைகள் அமைச்சில் பேசவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (அ-4)

### தவறவிட்ட தங்க நகைகள்

யாழ்ப்பாணம், டிச. 20

கடந்த ஞாயிறன்று புலோப்பளை பயணிகள் படகுச் சேவையின் போது தவறவிடப்பட்ட தங்க நகைகள் கந்தர்மடத்தில் உள்ள யாழ். மாவட்ட வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் உள்ளன என்றும்—

உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் வருவாய்ப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

(ஐ-9)

### பரீட்சை மீளாய்வு

கொழும்பு, டிச. 20

கடந்த வாரம் வெளியான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கு பரீட்சைத் திணைக்களத்தால் விண்ணப்பங்கள்கோரப்பட்டுள்ளன.

பாடசாலை விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை பாடசாலை அதிபர் ஊடாகவும் —

தனியார் விண்ணப்பதாரிகள் நேரடியாகவும் — பரீட்சைத் திணைக்களத்துக்கு அடுத்த மாதம் 9 ஆம் திகதிக்கு முன் அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

(ஐ-3)

### ஜயந்தி விழா

ஜோகிராஜ் ஸ்ரீ சுவாமி சச்சிதானந்தாஜியின் எண்பதாவது ஜயந்தி விழா எதிர்வரும் 22ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் நல்லூர் திவ்யஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும்.

நல்லை ஆதின முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சித்ரூபானந்தா சுவாமிகள், பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம், செல்வி புஸ்பா செல்வநாயகம் ஆகியோரின் சொற்பொழிவுகள் அதில் இடம் பெறும்.

சிவானந்த சிறுவர் பாடசாலையின் ஆண்டுவிழா நிகழ்ச்சிகளும் அங்கு நடைபெறும். (ஐ-க)

### விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், டிச. 20

அரியாலை ஐக்கிய விளையாட்டுகழகம் அமரர் இ. குமரையா ஞாபகார்த்தமாக நடத்திவரும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று பிற்பகல் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

2 45 மணி—சென் அன்ரனீஸ் வி.க.அணி எதிர் கலைவாணி வி.க.அணி,

4 மணி—றோயல் வி. க. அணி எதிர் பாடுமீன் வி.க. "பி" அணி.

(ஐ-20)

★ ★ ★

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் அரியாலை சரஸ்வதி ச ச நிலைய மைதானத்தில் நடத்தும் அமரர் மு. சிவரத்தினம் ஞாபகார்த்த கரப்பந்தாட்ட (செற்றப்) சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

பிற்பகல் 4 மணி—மோகனதாஸ் அணி எதிர் ஐங்கரன் அணி.

பிற்பகல் 5 மணி — கலைவாணி அணி எதிர் பாரதி "பி" அணி. (ஐ)

### ரயில்வே கடவை ஊழியர் சம்பளம்

நவாலி, டிச. 20

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ரயில்வே கடவை ஊழியர்களின் நவம்பர் மாதத்துக்கான சம்பளக் கொடுப்பனவு நாளையும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் யாழ். செயலகத்தில் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பென்சன் வவுச்சர்கள்

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் இம் மாதத்துக்கான பென்சன் வவுச்சர்கள் யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவில் இருந்து நேற்று தபால்மூலம் உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

(ஐ-100)

### சாவகச்சேரியில் இலவச மூக்கு கண்ணாடி

சாவகச்சேரி இந்துக்கல்லூரி லியோ கழகத்தினரின் ஏற்பாட்டில் தென்மராட்சிப் பகுதியில் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 50 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட உள்ளன.

இந்த வைபவம் நாளை புதன்கிழமை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

இவ் வைபவத்தில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் த. நவரத்தினராசா கலந்து கொள்வார். (இ-117)

### நாளை..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தரப்பு பிரதிநிதிகள் குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான நவீன் குணரத்ன பி. பி. ஸி சிங்கள சேவைக்குத் தெரிவித்தார்.

பாப்பரசரின் விஜயத்தை ஒட்டிய நிகழ்ச்சிகளில் வடபகுதி மக்களும் கலந்துகொள்வதற்கு வசதியாக, யாழ்ப்பாணத்துக்கான பாதுகாப்பான பாதை ஒன்று திறக்கப்படுமா என அவரிடம் கேட்டபோது —

நேற்றிரவு நடைபெற விருந்த — ஜனாதிபதி சந்திரிகா கூட்டியுள்ள — ஆலோசனைக் கூட்டத்திற்குப் பின்னரே இதுகுறித்து கருத்து வெளியிடமுடியும் என அவர் பதிலளித்தார்.

(உ-ஐ-3-4-6)

### இந்திய இழுவைப்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் விழுந்து படுத்தனர்.

இதனைக் கண்ட மக்கள் சிதறி ஓடினர்.

இச்சம்பவத்தின் போது பேசாலைத் தெருக்களில் நின்றவர்களும் ஓட [illegible] களும் இழுத்து [illegible]

இச் சம்பவங்கள் [illegible] நடந்து முடிந்த பின்பு தான் உண்மை தெரியவந்தது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்ரிசீமியா காரணமாக நவம்பரில் 13 பேர் மரணம்

குருநகர், டிச. 20

செப்ரிசீமியா நோயால் இறப்போர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த நவம்பர் மாதத்தில் மட்டும் 13 பேர் செப்ரிசீமியாவால் யாழ். போதனா வைத்தியசாலையில் இறந்ததாகவும்—

வெவ்வேறு காரணங்களால் நவம்பர் மாதத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் மொத்தம் 101 பேர் இறந்ததாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-51)

# யாழ். நகரில் மலத்தியோன் விசிறும் வேலை பாதிப்பு

யாழ்ப்பாணம், டிச. 20

யாழ். மாநகரப் பகுதியில் மலத்தியோன் விசிறும் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

மலத்தியோன் கையிருப்பு கடந்த வார இறுதியில் முடிந்ததை அடுத்து மருந்து விசிறும் வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

மலத்தியோனுக்குப் பதிலாக சுகாதார பகுதியினர் "அபேட்" என்ற மருந்தை வாய்க்கால் மற்றும் வீதியோரங்களுக்கு விசிறி வருகின்றனர். (ஐ-17)

### சாரதாதேவி ஜயந்தி விழா!

யாழ்ப்பாணம்' டிச. 20

தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 142 ஆவது ஜயந்தி விழா எதிர்வரும் ஞாயிறு பிற்பகல் 3.30 மணிக்கு திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் நடைபெற உள்ளது.

"பாரதப் பெண் பாரம்பரியத்தில் அன்னை சாரதா" என்ற தலைப்பில் செல்வி. கலாநிதி சண்முகநாதபிள்ளை உரையாற்றுவார்.

[ஐ]

### கிறிஸ்தவ வழிபாட்டு ஸ்தலம்

வடமராட்சி, டிச. 20

கிறிஸ்தவ ஜெபவழிபாட்டுத்தலம் ஒன்று மந்திகை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ் வழிபாட்டுத் தலத்துக்கென நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (இ-173)

### சிற்றூழியர் மூவர் திருமலைக்கு இடமாற்றம்!

நவாலி, டிச. 20

யாழ். உள்ளூராட்சித் திணைக்களத்தில் கடமையாற்றி வந்த சிற்றூழியர்கள் மூவர் எதிர்வரும் ஜனவரி முதல் திருமலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சித் திணைக்களம் இம்மாதம் 31ஆம் திகதியுடன் மூடப்படுவதை அடுத்தே இவர்கள் இடமாற்றம் செய்யப்படுகின்றனர். (ஐ-100)

### சிமெந்து ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், டிச. 20

காங்கேசன் லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களின் கார்த்திகை, மார்கழி மாதங்களுக்கான சம்பளக் கொடுப்பனவு நாளை புதன்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 2·30 மணிவரையும் யாழ். வர்த்தக வங்கிக் கிளையில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

லங்கா சிமெந்து துறைமுக ஊழியர்களுக்கும் அன்று கொடுப்பனவு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. [ஐ-3]


## பத்திரிகை விநியோக பணியாளர் தேவை

பத்திரிகை விநியோகம் செய்வதற்கு தேகாரோக்கியம் உள்ளவர்கள் தேவை. சொந்தத்தில் சைக்கிள் வைத்திருப்பது அவசியம். முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

அலுவலக நேரத்தில் நேரில் வரவும்.

ஆளணி முகாமையாளர்,
உதயன் வெளியீட்டகம்,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.



உதவி ஆசிரியர்
## தெரிவுப் பரீட்சை

28.12.94 இல் நடைபெறவுள்ள போட்டிப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள்

ஆரம்பம்: 21·12·94 3 மணி

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3rd Cross Street, Jaffna.

(சி-10069)


## மரண அறிவித்தல்

### தியாகராஜ ஐயர் இலட்சுமிகாந்தம் ஐயர்
[காந்தம் ஐயர்]

சங்கத்தானை சாவகச்சேரியை பிறப்பிடமாகக் கொண்டவரும், சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான தியாகராஜ ஐயர் இலட்சுமிகாந்தம் ஐயர் நேற்று (19-12-94) சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காயத்திரிதேவியின் (ஓய்வுபெற்ற அரசினர் நெசவு ஆசிரியர்) அன்புக் கணவரும், வேதரூபன், தியாகராஜன், உமாசுதன், மாதங்கி, ஜெகதீசன், சக்தியோஜாதன், தேஜோவதனி, தேஜோமயன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரசூடாமணி, இராஜபாஸ்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலசண்முகக் குருக்கள் (சிரணி நாகம்மாள் தேவஸ்தானம்), பத்மநாபன் (மட்டக்களப்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20-12-94) செவ்வாய்க்கிழமை நண்பகல் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்!
இ. வேதரூபன்
(மகன்)

சிவானந்த கிரி
முருகேச பண்டிதர் வீதி,
சுன்னாகம்.

(72443)